
ஏர் 10 ● உழவு 3 ● திருவள்ளுவர் ஆண்டு 2056 ● விலை ரூ.20/- ● மார்ச் 2025 (மாசி-பங்குனி)

சென்னை

# கொங்கு

## நண்பர்கள் மலர்



விண்வெளித்துறையின் முன்னோடி

பத்மஸ்ரீ டாக்டர். **ஆர்.எம்.வாசகம்**

Mr . V R GOVINDASAAMY
Mrs . G.RAJAM
FOUNDERS
PH - +91 94443 99199

M. SENTHILRAJ ceo
PH : +91 99448 99998

# AMMA NAANA

NO:100, CHAMIERS ROAD,
TEYNAMPET,
CHENNAI-600018.
PH - +91 98843 09993
Email : ammanaana.staff@gmail.com

**ECR , MRC NAGAR , MADURAVOYAL**

# கொங்கு நண்பர்கள் சங்கம்
## சென்னை

பதிவு எண். : 44/2016


அன்பு சொந்தங்களுக்கு,

வணக்கம்!

நமது சென்னை கொங்கு நண்பர்கள் மலர் கடந்த இதழிலிருந்து புதுப்பொலிவோடு உங்கள் கைகளில் தவழ்கிறது.

இம் மாத இதழும், இன்னும் மெருகேற்றி நன்முறையில் அச்சிடப்பட்டு வெளிக் கொணர்ந்துள்ளோம்.

சங்கத்திற்கும், உறுப்பினர்களுக்கும் இணைப்பும் பாலமாக விளங்கி வரும் செய்தி மடல் நன்முறையில் வெளிவர விளம்பர நன்கொடைகள் தந்து பேருதவி புரிந்து கொண்டிருக்கும் அன்பு உள்ளங்களை எவ்வளவு பாராட்டினாலும் தகுமே.

வரும் நாட்களிலும் நமது சங்க இதழ் சீரிய முறையில் அச்சிட்டு வெளிவர விளம்பர நன்கொடைகள் தந்து ஆதரவு நல்கிட உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி!

அன்புடன்,

[signature] 14/03/2025

(வி.க. செல்வக்குமார்)


**Published & Edited by :**
K.K.Ramesh on behalf of Kongu Nanbargal Sangam,
Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street,
Royapettah, Chennai - 600 014.

**Printed by** : M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.


### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.


**நிர்வாகக்குழு உறுப்பினர்கள் :**

தலைவர்
**V.K.செல்வக்குமார்**
MD - Chennai Mettex Lab Pvt. Ltd.,

செயலாளர்
**M.அமராபதி**
Managing Partner - Jairram Hi-Tech Products

பொருளாளர்
**C.கொங்குவேள்**
MD - Dharani Developers P.Ltd., (PGP Group)

துணைத் தலைவர்கள் :

திரு. **R.சண்முகவேல்**
MD - Sunbright Designers Pvt. Ltd.,

திரு. **V.P.வீரப்பன்**
MD - Sengam Transport

இணைச் செயலாளர்கள் :

திரு. **C.அரவிந்தன்**
MD - K Labs Technology & Solutions Pvt. Ltd.,

திரு. **P.ரவி**
Chairman - SKV Educational Institution's

**செயற்குழு உறுப்பினர்கள் :**

திரு. **அருள்பொன்னுசாமி**
Director - Ponmani Engineers Pvt. Ltd.,

திரு. **V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant

திரு. **S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)

திரு. **K.ஜெகதீசன்**
Chairman - Unitech Gorup

திரு. **S.சீனிவாசன்**
MD - Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,

திரு. **N.P.இசையழகன்**
Proprietor - M/s. Esai & Co., Chartered Accountants

திரு. **R.கந்தகார்த்திக்**
Proprietor - RKG & Sons Associates

திரு. **கதிர்வேல் கணபதியப்பன்**
Chairman - ISSM Business School

திரு. **K.G.ஜோதீஷ்குமார்**
JMD - Athiappa Chemicals (P). Ltd.,

திரு. **A.நடராஜன்**
Proprietor - NU-Tech Components

திரு. **S.ஜெகன்நாதன்**
President - Sri Krishna Power Loom Society

திரு. **K.நித்தியானந்தன்**
MD - Sri Devkrish Group

திரு. **விசா M.சண்முகம்**
Managing Partner - Sri Ambika Nets

திரு. **S.குணசேகரன்**
Managing Director - BRT Spinner Pvt. Ltd.,

திரு. **T.P.நடராஜன்**
Managing Partner - V.M.D. Groups, Chithode

திரு. **சிவப்பிரகாசம் மாணிக்கவாசகம்**
Director - RAWS N-Greens Health Care (P). Ltd.,

**திருமதி பரமேஸ்வரி சின்னசாமி**
Director - P & C Projects (P) Ltd.,

**டாக்டர் சண்முகப்பிரியா** MBBS.,
AGS Complex & Ware Houses

தணிக்கையாளர் : திரு. **R.பாலசந்திரன்** CA

# சென்னை மெட்டெக்ஸ் லேப் பி.லிட்
# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED ®
*Where Test Inspires Trust...*

**Registered Office : Jothi Complex, No.83, MKN Road, Guindy, Chennai - 600 032, Tamilnadu, India**

## NABL ACCREDITED
## ( ISO/IEC 17025:2017 )

TC-14172

# மஞ்சள் மாநகரில்
## மஞ்சள், எண்ணெய் மற்றும் தண்ணீர் ஆய்வகம்



# உணவுப்பொருள்
## சார்ந்த உற்பத்தியாளரா நீங்கள்?

உங்கள் உணவு உற்பத்தி பொருளை ஆய்வு செய்து மிக விரைவில்

**Food Test Reports & Certificates பெற**

எங்களது ஆய்வகத்தை அணுகவும்!

Testing Services

# FOOD PRODUCTS | OIL | WATER TESTING



# நமது ஈரோட்டில்!

**(சிறுதொழில் சங்க கட்டிடத்தில்)**



**Erode Lab - 8939872544 | 7299059215 | 9952949222 | 0424 2272282**

( EEDISSIA Building ), 5/1 SIDCO Industrial Estate, Chennimalai Road, Erode-638001.

# தலைவர் மடல்



அன்புடையீர், வணக்கம்

நலம், நலம் பல விழைகிறேன்

கடந்த மாத கொங்கு நண்பர்கள் மலர் புதுப்பொலிவுடன் தங்களின் கரங்களில் தவழ்ந்திருக்கும், அதற்கான முன் முயற்சி எடுத்து, வடிவமைத்ததோடு குறைந்த விலையில் அச்சிட ஏற்பாடு செய்து, நேர்த்தியான முறையில் வெளிக் கொணரப் பெரிதும் உழைத்தவர் நமது இணைச்செயலாளர் திரு.சி.அரவிந்தன் அவர்கள், அதேபோல, விளம்பரங்கள் பெறுவதில் முன்னோடியாக விளங்கியவர் நமது பொருளாளர் திரு.கொங்குவேள் ஆவார். அவர்களுக்கு நாம் நன்றி பாராட்டுவோம்.

இம்மாத இதழில் சிறப்புச் செய்தியாக இடம் பெறுவது வேட்டைக்காரன் புதூர் வி.கே.பழனிச்சாமிக்கவுண்டர் அவர்களாவார். ஆனைமலையின் மேற்குப் பகுதியில் உருவாகிப் பெருக்கெடுக்கும் நீர், யாருக்கும் பயனின்றிக் கடலில் கலக்கும் அந்நீரைத் திருப்பிக்கீழே கொண்டு வரும் திட்டம் குறித்துத் தொடர்ந்து சிந்தித்து 1937ல் முதன்முறையாக அன்றைய சென்னை மாகாண சட்டப்பேரவையில் அதற்காகக்குரல் எழுப்பிய முதல் சட்ட மன்ற உறுப்பினர் அவர்தான். தொடர்ந்து வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பரம்பிக்குளம் திட்டம் பற்றியே பேசியவர். அவரின் தொடர் முயற்சிகளும், வற்புறுத்தல்களும் பின்னாளில் பயனளித்தன. தமிழறிஞர் பெரியசாமித்தூரன் அவர்களின் திருமகனார் திரு,சுதந்திரக் குமார் அவர்கள் வி.கே.பழனிச்சாமிக் கவுண்டர் "வாழ்வும் தொண்டும்"என்ற கையேட்டைத் தந்து உதவினார். அதிலிருந்து ஒரு பகுதியை, வெளியிட்டு "பி.ஏ.பி கண்ட வி.கே.பி" அவர்களுக்குப் புகழ் சேர்க்கிறது கொங்கு நண்பர்கள் சங்கம்.

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தொலைத்தொடர்புக்கான 'ஆப்பிள்' செயற்கைக்கோளை 1981–லேயே, விண்ணில் செலுத்தி 36,000 கி.மீ. தொலைவில் நிலைநிறுத்தி சாதனை புரிந்த விண்வெளித் திட்டத்தின் திட்ட இயக்குநாராகப் பொறுப்பேற்றிருந்தவர் பத்மஸ்ரீ.டாக்டர்.ஆர்.எம்.வாசகம் அவர்கள் 1996–ல் விருப்ப ஓய்வு பெற்று அண்ணா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார். விண்வெளித் துறையிலேயே தொடர்ந்திருந்தால், அவரது சாதனைகள் இன்னும் விண்ணுயரச் சென்றிருக்கும். கடந்த மாதம் மறைவுற்ற, அப்பழுக்கற்ற விண்வெளி அறிவியலாளர் ஆர்.எம்.வாசகம் அவர்களை நினைவு கூர்ந்து, நமது சங்க முன்னாள் செயலர் திரு.கே.எஸ்.கே.வேலுமணி அவர்கள் தி இந்து தமிழ் திசையில் திரு.மயில்சாமி அண்ணாதுரை வரைந்த கட்டுரையை அனுப்பினார். பத்மஸ்ரீ டாக்டர்.ஆர்.எம்.வாசகம் நினைவு போற்றி அதை வெளியிட்டுள்ளோம். தனது இறுதி நாட்களில், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு பெங்களூரு மருத்துவமனையில் உயிரிழந்த சோக நிகழ்வுகளை வழக்கறிஞர் எஸ்.டி,எஸ் .மூர்த்தி அவர்கள் நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

இம் மாத இதழ் தரமான தாளில் நேர்த்தியாக வெளிவர விளம்பரங்கள் தந்து உதவிய நல் உள்ளங்களுக்கு நெஞ்சாரந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து. (குறள் : 105)

ஒருவர் செய்யும் உதவியின் அளவு, அதன் மதிப்பைப் பொறுத்தன்று;

செய்யப்பட்டவரின் பண்பினைப் பொறுத்ததாகும் என்று இக்குறளுக்கு பொருளுரைக்கிறார் பேராசிரியர் அ.மாணிக்கம் எம்.ஏ அவர்கள்.

அன்புடன்

**வீ.க.செல்வக்குமார்**

தலைவர்

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்



# கொங்கு நண்பர்கள் சங்கம்

(பதிவு எண் : 282/76)






**FACILITIES**

| | |
|---|---|
| AC Rooms | TV - CCTV - Wifi |
| Double Cot | Safety Secure |
| Water Bottle | Bathroom Heater |
| Towel | Drinking Water Dispenser |

**Discount for Members**

"தீரன் சின்னமலை மாளிகை"
நெ.72, பீட்டர்ஸ் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.

**chennaikongu@gmail.com**
**044 - 4266 8046**
**Cell : 93815 45451**



## கொங்கு மகளிர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Sharing Room | Safety Secure |
| Double Cot | Bathroom Heater |
| CCTV - Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

**chennaikongu@gmail.com**
**044 - 4266 8046 | Cell : 63839 85919**

**"கொங்கு நாடு இல்லம்"** 27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014




## கொங்கு மாணவர் விடுதி

**FACILITIES**

| | |
|---|---|
| Double Cot | Safety Secure |
| CCTV | Bathroom Heater |
| Wifi | Drinking Water Dispenser |

**Two Wheeler Parking Available**

**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

**"வெள்ளி விழா இல்லம்"** 34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.

**www.kongunanbargalsangam.com**



# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்

நடைபெற்று வரும் 10– ம் வகுப்பு மற்றும் 12– ம் வகுப்பு பொதுத் தேர்வுகள் எழுதும் நமது குழந்தைகள் சிறப்பான முறையில் தேர்ச்சி பெற நமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்!!

சென்ற மாத நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கடந்த அரை ஆண்டுக்கான வரவு செலவுகளை தணிக்கையாளர் (Internal Auditing) சமர்ப்பித்தார் அதன் மூலம் அறியப்பட்டது –

1. மாணவ மாணவியரிடமிருந்து பெறப்பட்ட விடுதிக்கட்டண அட்வான்ஸ் தொகை–
2. புதிய உறுப்பினர் சேர்க்கை வாயிலாகப் பெறப்பட்ட கட்டணத் தொகை–
3. தீரன் சின்னமலை மாளிகையின் கடை வாடகைக்கு விட்டதன் மூலம் பெறப்பட்ட அட்வான்ஸ் தொகை– ஆகியவை கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்ற குடும்ப விழா மற்றும் இதர செலவுகளுக்காக செயற்குழு ஒப்புதல் இன்றி செலவிடப்பட்டது (சுமார் 30 இலட்சம்) என்று அறிக்கை தெரிவித்துள்ளது.

செயற்குழு உறுப்பினர் திரு.இசையழகன் இல்லத் திருமண வரவேற்பு விழா கடந்த பிப்ரவரி 18ம் தேதி ஆத்தூரில் நடைபெற்றது. சங்கத்தின் சார்பாக நிர்வாகிகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தியது ஒரு மகிழ்வான நிகழ்வாக அமைந்தது. நமது செயற்குழு உறுப்பினர் திருமதி. டாக்டர். சண்முகப்பிரியா குகன் அவர்கள் மகளிர் விடுதியை மேம்படுத்த சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது.

இன்றைய தலைமுறையினருக்கு தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக ஜெம் மருத்துவமனை நிறுவனர் டாக்டர். சி.பழனிவேலு அவர்களின் “எதுவும் இன்றி” சுயசரிதை நூல் வெளியிடப்பட்டுள்ளது. சங்கத்தின் சார்பாக நமது மனமார்ந்த வாழ்த்துகள்!!

நம் சமுதாயத்தை சார்ந்த திரு. ஆர். எம். வாசகம் (ராமசாமி மாணிக்கவாசகம்) அறிவியல் தொழில் நுட்பக் கல்வியிலும், விண்வெளி ஆராய்ச்சித் துறையிலும் தடம் பதித்து அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர்.இவர் சென்ற மாதம் பெங்களூரில் காலமானார்.இவர் முதல் தலைமுறை இந்திய அறிவியலாளர்களில் முக்கிய ஆளுமையாகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்மஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு விருதுகளைப் பெற்ற பெருமைக்குரியவர். அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். செயற்குழு உறுப்பினர் திரு.நித்தியானந்தன் அவர்களின் தந்தையார் சென்ற வாரம் காலமானார், அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்!!

ஆடவர் மற்றும் பெண்கள் விடுதி மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் உபயோகத்திற்கு தயாராக உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.தீரன் சின்னமலை மாளிகையும் நமது சங்கத்தின் பொருளாளர் திரு.கொங்குவேள் அவர்களின் பங்களிப்புடன் மேம்படுத்தப்பட்டு கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

**எம்.அமராபதி**
செயலாளர்
சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

# நினைவோவியம்



இயற்கை படைத்த ஒளிப்படமோ – அன்றி
வரைகலை வித்தகர் வரைந்த ஓவியமோ
அறியேன் யான்!
ஆயின்

நினைவு பெட்டகம் பிளந்து
மண்மூடிய கீழடியாய்
பல காலம் மறைந்திருந்த
நினைவோவியத்தை நெஞ்சில்
படரவிட்டது இவ்வொளிப்படம்!

தஞ்சை புதுகை பெருவழியில்
கிளைத்தது ஓர் மண்பாதை.
அரச தருவின் அடிமரத்தை
தழுவி நின்றதோர் பெட்டிக்கடை.
வேய்ந்த கூரையுடன் பாதை
ஓரமாய் சில மர இருக்கை.

நண்பர் வருகைக்கு காத்திருந்தேன்!

காத்திருப்பு நீண்டது!

காலை வயலுக்குப் போவோர்,
ஆடு மாடு வியாபாரிகள், தினசரியில்
லாட்டரி முடிவைத் தேடுவோர்,
காய்கறி தானிய வணிகர், கிளி
ஜோதிடர், வழிப்போக்கர் என
கலவையாய் மனிதர்கள்!

பீடி புகைத்து, தேநீர் அருந்தி, கதைத்து
நகைத்து கலைந்துபோயினர்.
ஆடியென அவர் முகம் காட்டியதில்

ஆசையிருந்தது பேராசையில்லை
ஏக்கம் இருந்தது, ஏமாற்றம் இல்லை
தேடல் இருந்தது, தடுமாற்றம் இல்லை
செயலிருந்தது, சோம்பலில்லை!

வியந்து மனதால் படம் பிடித்தேன்
அன்று!
வண்ண ஓவியமாய் இதழேறியது
இன்று!

“வாழி நலம் சூழ!”

– கலாப்ரியன் (பூபதி)

SINCE 1996

# UNITECH GROUP OF COMPANIES

S10-S11, Sipcot Industrial Park, Pillaipakkam, Sriperumbadur, Kanchipuram district-602105

info@unitechplasto.in +91-9176717140 www.unitechplasto.in



1. **Injection Moulding**
   Horizontal & Vertical Machine: Ranges from 40Ton to 1800 Ton
2. **Twin Injection**
   Ranges from 100Ton to 250Ton
3. **Spray Painting**
   - Manual spraying booth
   - Automatic spraying booth - 2 axis / 6 axis / 8 axis
   - Conveyorized spraying booth
   - Conveyorized 6 axis Robot spraying booth
4. **Laser Etching**
   Fiber/ diode Laser Machine (Semi Auto)
5. **Pad & Screen Printing**
   Pad Printing Machine (Semi Auto)
6. **Commodity Assembly**
   Integrated Assembly line with Functional Testing
7. **Surface Mounting Technology**
   Integrated line station with fully automated process for mounting active & passive components onto PCB board.
8. **Vacuum Metalizing**
   Physical vapour deposition



JAGADEESAN.K
CHAIRMAN



PIONEERS OF AUTOMOTIVE COMPONENTS, MEDICAL COMPONENTS E-MOBILITY, PCBs, INTEGRATED ELECTRONIC COMPONENTS

# ஓர் எழுத்து சொற்கள்
# தமிழ்
## இலக்கணம்

தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் 247, இந்த 247 எழுத்துக்களில் 42 எழுத்துக்கள் ஒரெழுத்து சொல்லாக விளங்குகின்றன, அதாவது இந்த 42 எழுத்துக்களுக்கும் தனியாக பொருள் உண்டு.

அ .... எட்டு
ஆ .... பசு
ஈ .... கொடு, பறக்கும் பூச்சி
உ .... சிவன்
ஊ .... தசை, இறைச்சி
ஏ .... அம்பு
ஐ .... ஐந்து, அழகு, தலைவன், வியப்பு
ஓ .... வினா, மதகு – நீர் தாங்கும் பலகை
கா .... சோலை, காத்தல்
கூ .... பூமி, கூவுதல்
கை .... கரம், உறுப்பு
கோ .... அரசன், தலைவன், இறைவன்
சா .... இறப்பு, மரணம், பேய், சாதல்
சீ .... இகழ்ச்சி, திருமகள்
சே .... எருது, அழிஞ்சில் மரம்
சோ .... மதில்
தா .... கொடு, கேட்பது
தீ .... நெருப்பு
து .... கெடு, உண், பிரிவு, உணவு, பறவை இறகு
தூ .... வெண்மை, தூய்மை
தே .... நாயகன், தெய்வம்
தை .... மாதம்
நா .... நாக்கு
நீ .... நின்னை
நே .... அன்பு, நேயம்
நை .... வருந்து, நைதல்
நொ .... நொண்டி, துன்பம்
நோ .... நோவு, வருத்தம்
நௌ .... மரக்கலம்
பா .... பாட்டு, நிழல், அழகு
பூ .... மலர்
பே .... மேகம், நுரை, அழகு
பை .... பாம்புப் படம், பசுமை, உறை
போ .... செல்
மா .... மாமரம், பெரிய, விலங்கு
மீ .... ஆகாயம், மேலே, உயரம்
மு .... மூப்பு
மூ .... மூன்று
மே .... மேன்மை, மேல்
மை .... அஞ்சனம், கண்மை, இருள்
மோ .... முகர்தல், மோதல்
யா .... அகலம், மரம்
வா .... அழைத்தல்
வீ .... பறவை, பூ, அழகு
வை .... வைக்கோல், கூர்மை, வைதல், வைத்தல்
வௌ .... கௌவுதல், கொள்ளை அடித்தல்

தகவல் : திரு.தங்கவேல்,
மந்த்ராலயம் சிமெண்ட்ஸ், ஒலப்பாளையம்

# வருந்துகிறோம்



நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் திரு. கே.நித்தியானந்தன் அவர்களின் தந்தை ஆட்டுகிடா மில் **பி.கிருஷ்ணசாமிக்கவுண்டர்** அவர்கள் 26-02-2025 அன்று இயற்கை எய்தினார். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அன்னாரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## தன்னம்பிக்கைச் சிந்தனை

புண்படுத்தியவரையும்
பண்படுத்தும் இயல்புடையவரே
பண்பட்டவராவார்!

---

எண்ணத்தை கவனித்து
களைகளை நீக்கிக் கொண்டே
இருந்தால் தவறென்னும் சகதியில்
தவறி விழும் அபாயம் இருக்காது

- சிந்தனைக்கவிஞர் கவிதாசன்

# UK BUILDERS
Builders & Contractors

*We Build...*

*Your Dream Homes*

*with Trust & Quality...*





**Rtn. R.BALASUBRAMANIAN**

S1, 2nd Avenue, Shasthri Nagar,
MG Road, Adyar, Chennai - 600 020
Mobile : 98400 68698

# வாழ்த்துகிறோம்



நமது சங்க உறுப்பினர் திரு. எம்.தாமோதரசாமி அவர்களின் மகள் திருமணவிழா 01–03–2025 அன்று அவிநாசி, மங்கலம் சாலை ஸ்ரீஇராஜகணபதி மகாலில் நடைபெற்றது. அவ்விழாவில் சங்கத்தின் தலைவர் திரு.வீ.க.செல்வக்குமார் அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்தினார்.



சங்க உறுப்பினரும், தமிழ்நாடு & கேரள மாநில முதன்மைக் கணக்கு ஆய்வாளருமான (பணி நிறைவு) திரு.செ.நாகல்சாமி IAAS – திருமதி. நா.தமிழரசி MSc, MPhil, Bed., அவர்களின் புதல்வி செல்வி நா. நாதமி BSL,LLB அவர்களுக்கும், திரு.க.செல்லமுத்து – செ. இலட்சுமி அவர்களின் செல்வன் க.செ.பாலசுப்பிரமணியன் BE., அவர்களுக்கும் பள்ளபட்டியில் 11.03.2025 அன்று நடந்த திருமண வரவேற்பு! சங்கத்தின் சார்பாக மணமக்களை வாழ்த்தி மகிழ்கிறோம்.



நமது சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் எம் பி இசை அழகன்அவர்களின் மகள் திருமண விழாவில் நமது சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுப்பாட்டு சட்டங்கள் பற்றிய விரிவான விளக்கவுரை வழிகாட்டியை பிப்ரவரி மாதம் 24ஆம் தேதி சென்னை உயர் நீதிமன்றம் கட்டிடம் பார் கவுன்சிலர் ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது.

புத்தகத்தை எழுதியவர் வழக்கறிஞர் திரு. நவீன்குமார்மூர்த்தி ஆவார். நமது சங்கத்தின் செயலாளர் திரு. எம்.அமராவதி, உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



9–2–2025 ஞாயிறன்று சென்னை கொங்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்(3088), சித்தோடு கொங்கு நண்பர்கள் அசோசியேட்ஸ் LLP மற்றும் கொங்கு மாளிகை –கௌரவ செயலாளர், கொங்குமுன்னணி–நிறுவன செயலாளர்,சித்தோடு கொங்குநாடு மனித நேய அறக்கட்டளை – நிறுவனர் மற்றும் தலைவர் C.துரைசாமி – பானுமதி இளையமகன் சுபாஷ் சந்தரன்– சரண்யபிரபா திருமண வரவேற்பு, சித்தோடு கொங்கு மாளிகையில் நடைபெற்றது. (சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்திய நிகழ்வு)

RHUKRA®
CAKE HOUSE

French Pâtisserie

112/2, Annamalai Nagar, Veerappan Chatiram, Erode - 638 004

**Call us : 93 602 88 889**

rhukra cake house

---


RHUKRA
MAHAL


180/14, Municipal Colony Road, Opp.Papathikadu 2, Veerappan Chatiram, Erode - 638 004.

**Call us : 96886 45678**

அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

# இயற்கையின் பாதையில்





### ஓ ஆக்ஸிஜனே!

இனிய காலைப் பொழுதினிலே நாம் சூரிய உதயத்திற்கு முன் எழுந்து கொள்வது மற்றும் நடத்தல் யோகா, விளையாட்டு போன்ற உடல் மற்றும் உள்ள பயிற்சிகளைக் கொடுக்கும் பொழுது உடல் சோர்வு அகன்று, குளித்த பின்னர், உடல் புத்துணர்ச்சி பெறுகின்றது. காலையில் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து இவற்றைச் செய்வது என்பது மிகவும் விரும்பப்படுவதற்குக் காரணம், அந்நேரத்தில் காற்றில் உள்ள கரித்துகள்களை எல்லாம் ஓரளவு படிந்து குறைந்து, சூழ்நிலையில் தாவரங்களால் கிடைக்கப் பெற்ற ஆக்ஸிஜனின் அளவு நமது அதிகாலை நேரங்களில் அதிகமாக உள்ளது. அதுவே அதிகாலைப் புத்துணர்ச்சிக்கு அதீத காரணமாகும். மேலும் அதிக பிராணவாயு கிடைக்கும் பொழுது நமது சுவாச மண்டலம், இதயம் மற்றும் நுரையீரல்களும், இரத்த ஓட்டமும், இரத்தமும் நலம் பெறுகின்றன.

### இயற்கை வளர்க்கும் உடம்பு

நம் உடல் வளர்ச்சியும் இயற்கையின்பால் பட்டதாகும். ஆனால் நாம் இயற்கை நமக்கு என்ன (உடல்) வளர்ச்சிக்கு) காரணமாக நின்று வளர்ச்சிக்கு ஊக்குவிக்கின்றது என்ற கேள்வியை எழுப்பி, அதன் பதிலைச்சரியான முறையில் கிரகித்து விளக்கம் தருவோமேயானால், எல்லாம் இயற்கையாலே என்ற தத்துவம் நமக்கு நன்றாகப் புரியும்.

நமது உடம்பானது நீரும் சதையும் எலும்பும் நிறைந்த ஒரு அழகான அமைப்பாகும். அதில் நடக்கும் இரசாயண வினைகளையும், நொதிப் பொருட்களின் சுரப்புகளையும் நினைத்துப் பார்க்கும் பொழுது மிகவும் விந்தையாகத் தெரியும். இவைகளுக்கெல்லாம் மூலாதாரமாக எவை எவை பயன்படுகின்றன என்று பார்த்தால், மிக முக்கியமான இரண்டு காரணிகளை நாம் சொல்லாம். ஒன்று நீர்; இரண்டு பிராணவாயு என்ற ஆக்ஸிஜன் (காற்று), எல்லா வினைகளுக்கும் அவ்வவற்றுக்கென்று ஒரு தலைமைப் பங்காளனாக விளங்கும் கருவிகளுள் தனிப்பட்ட ஓர் அமைப்பாக விளங்கும் நமது இதயம். மற்ற அவயவங்களென சிறுகுடல், பெருங்குடல், மூளை, சிறுநீரகம் கல்லீரல், மண்ணீரல், நுரையீரல் போன்றவைகள்.

### இயற்கையில் உடம்பிற்குக் கிடைப்பவை :

நமது பிராணவாயு என்பதை நினைத்துப் பாக்கும்பொழுது அது எங்கே உற்பத்தி ஆனது ? எவ்வாறு நிலைநிறுத்தி வைக்கப்படுகிறது ? என்ற கேள்விகள் எழுவது நியாயம்தான். தாவரங்கள் சுவாசிக்கும் பொழுது

அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

நம்மைப்போலவே சுவாசக்காற்றாக ஆக்ஸிஜனை உள்வாங்கிக் கொண்டு கரியமில வாயுவை வெளிவிடுகின்றன. இது அசுத்தக்காற்று, பதிலாகப் பகலில் சூரியவெளிச்சத்தில் தாவரங்கள் கார்பன்–டை–ஆக்ஸைடை உட்கிரகித்துக் கொண்டு உணவு தயரிக்கும் பொழுது பிராணவாயுவை வெளிவிடுகின்றன. அதனால்தான் பகலில் மரத்தடியில், மரநிழலில் இதமான சுவாசிக்க உகந்த சூழ்நிலையும், இரவில் கரியமிலவாயு வெளிவிடப்படுவதால் அசாதாரணமான ஒரு சூழ்நிலையும் உருவாவவதால், இரவில் யாரும் மரத்தடியில் தங்கவோ அல்லது உறங்கவோ கூடாது.

***பிராணவாயு நிலைநிறுத்தம் –***

என் மனைவியிடம் இவ்வாறு பாடினேன்:–
(இது எங்கெங்கும் கேட்கட்டும்)
ஏறுவண்டி பூட்டியல்லோ
இதமான குளக்கரையில்
சோறுகொண்டு போய்வரவே
சுதந்திரமாய் ஓடிநின்றோம்
நீறு வேண்டிக் கோவில் கண்டு
நித்தமுமே உணவுமுண்டு
கூறுவண்டீ கூத்தெடுத்துக்
குற்றமெங்கே செய்தோமென்று
மரம்வெட்டிக் கோடி கொண்டு
மடத்தனமாய்த் தள்ளிவிட்டுத்
தரங்கைட்டா லென்னவென்று
தாறுமாறாய் வெட்டினோண்டீ
பரம் பொருளா மியற்கை வேண்டிப்
பாதிமழை போதுமென்றே.
இரந்தெடுத்துப் பயந்தழவே
இயற்கைதனை அழித்துவிட்டோம்!
பெரிதாக்கிச் சூடுகண்டு
பரிதவிக்கும் பூமியுள்ளே
வரிவாங்கிப் பாவிமக்கள்
வாழ்வதனை அழித்துவிட்டுப்
பரிவாகப் பேசுகின்றார்
பாழடைந்த பசுமரங்கள்
கரிதாங்கும் வானமந்தோ
கவலையின்றிக் கொட்டுதய்யா!
தரந்தாழ்ந்து தரித்திரமாய்த்
தானுறிஞ்சப் பிராணவாயு
இரந்தேங்கிக் கதறினாலும்
இயற்கையல்லார் யார்முடிப்பார்
வரந்தரவே வாழ்வழிக்க
வளர்ந்துவிட்ட ஆலையெல்லாம்
சிரம்தாழ்ந்து ஒதுக்கிவைத்துச்
சீர்மிகவே மரம் வளர்ப்போம்!
கள்ளமில்லா வண்ணமலர்க்
காவிரியாம் தாய்மடியில்
துள்ளிவிளை யாடிவந்த
தூபமணிக் காற்றுமிங்கே
எள்ளிநகை யாடியல்லோ
இயந்திரமாய் அடிக்கையிலே
பள்ளிதனக் கோடியன்று
படித்ததையே நினைவு செய்வேன்!



**மிகமுக்கியம் மனிதமே!**

தொழிற்சாலைகள் மற்றும் வாகனங்களைக் குறைத்தல், நீர்லைதோறும் மரம்வளர்த்தல், குளக்கரைகளில் மரம்வளர்த்தல், கோவில்களிலும் அவைசார்ந்த விளைநிலங்களையும் மரக்காடுகளாக்குதல், தேவை இல்லாத போழ்து அநாவசியமாக மரம் வெட்டுதலைக் கொலைக்குற்றம் போல் பாவித்துச் சிறைப்படுத்துதல், அநாவசிய மரம் விற்பனையைத் தடுத்தல், மரப் பராமரிப்பு, தாவரம் மற்றும் மூலிகைக் காடுகளைப் பேணி வளர்த்தல் வீடுகளில் புறவிடை மற்றும் மாடிகளில் தோட்டம் அமைத்தல் போன்றவற்றாலேயே இருக்கும் பிராணவாயுவைக் கெடாமல் நிலைநிறுத்தம் செய்ய முடியும்.

**தன்னம்பிக்கைச் சிந்தனை**

காத்திருந்தால் கரி கூட
வைரமாகிறது.
காத்திருப்பது கூட
ஒரு விதத் தவம்தான்.

– சிந்தனைக்கவிஞர் **கவிதாசன்**

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் / நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 145 | T.யாமினி | மணியன் | 10-12-1996<br>கேட்டை | BDS | Dental Doctor | சென்னை<br>07.03 pm | 98840 32455<br>72993 60211 |
| 146 | E.ரம்யா | மணியன் | 09-06-1995<br>சித்திரை | BE., MBA., | Software Engineer | திருச்செங்கோடு<br>08.45 am | 87541 93919 |
| 147 | R.ரம்யா | விழியன் | 11-12-1993<br>சித்திரை | BE., EEE | IT Software | ஈரோடு<br>07.09 pm | 99520 92347<br>98650 92150 |
| 148 | D.கீர்த்தனா | தனஞ்செயன் | 07-03-1997<br>அவிட்டம் | BE., | Studying | கோவை<br>10.00 pm | 99653 48235 |
| 149 | M.P.அமிர்தாஸ்ருதி | பூசன் | 06-01-2000<br>பூராடம் | MBA,. | US Tax Professional<br>PWC, Bangalore | சென்னை<br>04.07 pm | 73387 94813<br>94433 66650 |
| 150 | S.ஸ்வாதி ரத்னா | மணியன் | 01-09-1994<br>புனர்பூசம் | B.Tech., | Sr.SP Indian Post<br>Govt. Kerala | சேலம்<br>11.33 pm | 90470 41651<br>98940 49433 |
| 151 | R.ஷாலினி | செங்கண்ணி | 09-08-1999<br>மிதுனம் | B.Sc., (MSW) | Collectorate<br>Kallakurichi | நாமக்கல்<br>05.27 am | 95852 76399<br>89251 08560 |

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | வயது | கல்வி | தொழில் | பிறந்த இடம் / நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 125 | S.G.முரளி | பில்லன் | 05-05-1998<br>மகம் | B.E., (Mech) | Product Manager<br>Manager | சென்னை<br>10.35 am | 98406 19488 |
| 126 | M.இராஜாதுரை | செல்லன் | 24-12-1996<br>மிருகசீரிடம் | B.E., (Mech) | Design Engineer | நாமக்கல்<br>04.15 pm | 94869 80226<br>94864 10226 |
| 127 | M.பிரேம் விஷ்வா | கண்ணந்தை | 13-03-1996<br>மூலம் | MDS.,<br>(CLEFT) | Dental Doctor | சேலம்<br>04.46 pm | 94432 33660<br>94875 33660 |
| 128 | Dr.P.ஜீவித்தன் | செம்பூத்தன் | 11-04-1996<br>உத்திராடம் | MBBS., | Doctor<br>Akshya Hospital | சென்னை<br>11.50 pm | 98947 80565<br>94433 45379 |



*Best Compliments from*

## Manufacturer of Softgel, Tablets, Capsules, Ointments/ Nutraceuticals



# Prim Drugs & Pharmaceuticals (I) Pvt. Ltd.,

## WHO - GMP Certified Company

***Corp. off:***

Sy No: 9/7, Jawaharlal Nehru Street, Guruswamy Nagar Extn., Mugalivakkam, Porur, Chennai - 600 125. Tamil Nadu. India. Landline: +91-44-4861 5631, Mob : + 91- 9444018021 primdrugsltd@gmail.com, primlabsltd@yahoo.com






# சக்தி சிறப்புப் பள்ளிகள் மற்றும் சக்தி மறுவாழ்வு மையம்



சக்தி மசாலா நிறுவனங்களின் ஓர் அங்கமான சக்திதேவி அறக்கடடளை நடத்திவரும் சக்தி சிறப்புப் பள்ளிகள் மற்றும் சக்தி மறுவாழ்வு மையத்தில் நடைபெற்ற போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா, வழிகாட்டி திட்ட பரிசளிப்பு விழா மற்றும் விருட்சம் திட்ட கல்வி உதவித்தொகை வழங்கும் விழா என முப்பெரும் விழா, ஈரோடு, சக்தி துரைசாமி திருமண மாளிகையில் 04.02.2025 ஞாயிறுக்கிழமை அன்று நடைபெற்றது.

சக்திதேவி அறக்கட்டளையின் அறங்காவலர் டாக்டர் சாந்தி துரைசாமி அவர்கள் குத்துவிளக்கேற்றி விழாவைத் தொடங்கி வைத்தார். சக்திதேவி அறக்கட்டளையின் அறங்காவலர் டாக்டர் பி.சி.துரைசாமி அவர்கள் விழாவுக்குத் தலைமையேற்று அனைவரையும் வரவேற்று உரையாற்றினார்

அவர் பேசுகையில், “சிறப்பு குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்ற அக்கறையுடன் 24 ஆண்டுகளுக்கு முன் சக்திதேவி அறக்கட்டளை தொடங்கப்பட்டது. இத்தகைய குழந்தைகளின் எதிர்காலம் என்னவாகும் என கலங்கித் தவிக்கும் பெற்றோர்களுக்கு, “குறையொன்றும் இல்லை” கவலைப்படாதீர்கள். நாங்கள் இருக்கிறோம்’ என்று ஆரம்பிக்கப்பட்டதுதான் சக்திதேவி அறக்கட்டளை.

இதில் சராசரியாக 200க்கும் மேற்பட்ட குழந்தைகள் தினந்தோறும் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். 50–க்கும் மேற்பட்ட பணியாளர்கள் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் சக்திதேவி அறக்கட்டளை சிறப்பாக செயல்படாது. அந்த அளவிற்கு அர்ப்பணிப்பு உணர்வோடு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அவர்களை எல்லாம் இந்த நேரத்தில் பாராட்டி மகிழ்கின்றேன்.

அடுத்து, வழிகாட்டி திட்டம். அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு தனியார் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு இணையான வசதிகளோ, வாய்ப்புகளோ இல்லை, அத்தகைய மாணவர்களுக்கு வருடம் முழுவதும் பல்வேறு போட்டிகளை நடத்தி,







அவர்களை ஊக்குவித்து அவர்கள் வாழ்விலே ஒளிபெறச் செய்ய வேண்டும் எனற நோக்கத்தோடு தொடங்கப்பட்டதுதான் வழிகாட்டி திட்டம். இத்திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் நூலகம் அமைத்து அறிவை மேம்படச் செய்கின்ற வகையிலே அங்கே பல்வேறு நூல்களை வழங்கி சேவை புரிந்து வருகிறோம். மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சிகளும் வழங்குகிறோம். நாம் எவ்வளவுதான் ஊக்கப்படுத்தினாலும், மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கிற ஆசிரியப் பெருமக்கள் சிறப்பாகப் பணிபுரிந்தால்தான் மாணவர்களுடைய கல்வி சிறப்பாக இருக்கும். அந்த வகையிலே ஈரோடு மாவட்டத்திலே 41 பள்ளிகளை வழிகாட்டி திட்டத்திலே தத்தெடுத்து இருக்கிறோம். அந்த 41 பள்ளிகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற ஆசிரியர் பெருமக்களையும் இந்த நேரத்தில் பாராட்டுகின்ற வகையில் அவர்களையும் அழைத்து இருக்கின்றோம். அவர்களுக்கும் எங்களுடைய பணிவான வணக்கங்களையும் வாழ்த்துகளையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து விருட்சம் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிவுற்ற மாணவ, மாணவிகளுக்கு உயர்கல்வி படிப்பதற்காக ஆண்டுதொறும் கல்விக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்தி அவர்களை ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றோம்.

சத்திதேவி அறக்கட்டளை தொடர்ந்து இதுபோன்ற நல்ல பணிகளைச் செய்துகொண்டே இருக்கும் என்கிற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன், சக்திதேவி அறக்கட்டளையின் சிறிய கட்டடத்தில் மிகவும் நெருக்கடியான இடத்திலே மூன்று ஆண்டுகள் இந்த விழாவை நாங்கள் நடத்தி வந்தோம். அப்படி இல்லாமல், ஒரு பெரிய, குளுகுளு வசதி செய்யப்பட்ட அரங்கத்திலே, மிகுந்த பொருட்செலவில் இந்தப் பெற்றோர்களை எல்லாம் ஊக்குவிக்க வேண்டும். இந்த மாணவர்களை எல்லாம் ஊக்குவிக்க வேண்டும், “ஆசிரியப் பெருமக்களை எல்லாம் உற்சாகமடையச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே இங்கே நாம் இந்த நிகழ்ச்சியை சிறப்பான விருந்தினர்களை எல்லாம் அழைத்து தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கின்றோம்” என்றார் டாக்டர் பி.சி.துரைசாமி.

– நன்றி,
சக்தி தேவி அறக்கட்டளை

**தன்னம்பிக்கைச் சிந்தனை**

நல்லது நடக்க நாள் பிடிக்கும்,
வெற்றி என்பது விபத்தல்ல,

வியர்வைத் துளிகளின் விளைச்சல்!

---

துதி பாடுபவர்களை விட
குறை கூறுபவர்களே
வணக்கத்திற்குரியவர்கள், ஏனென்றால்
அவர்கள் தான் நமது வளர்ச்சிக்கு
வழி சொல்லுகிறார்கள்!

---

உணர்ச்சியின் உச்சியில் நின்று
முடிவுகளை எடுக்காமல் தெளிவின்
மடியில் அமர்ந்து முடிவெடுக்கும் போது
வெற்றியின் சிகரத்தை
தொடுவது உறுதி.

– சிந்தனைக் கவிஞர் **கவிதாசன்**



# மனைவியின் நலம் பேணுவது கணவனின் கடமை!


கொங்குமாமணி பத்மஶ்ரீ
**டாக்டர் வி.எஸ்.நடராஜன்**
முதியோர் நல மருத்துவர்,
சென்னை


முன்பேல்லாம் பெண்கள் நீண்டகாலம் வாழ்ந்து வந்துள்ளார்கள். ஆனால் சமீப காலமாக அவர்களின் உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டு பலர் மரணமடைந்து வருகிறார்கள். இதற்கு காரணம் என்ன ?

குடும்ப நலம், நிதி நலம் மற்றும் உறவு முறைகளை பேணிக் காப்பதிலேயே பெண்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அப்படியே ஏதாவது தொல்லைகள் ஏற்பட்டால் வயதானால் எல்லாம் வரத்தான் செய்யும் அதற்காக டாக்டரிடம் போக வேண்டுமா ? இதனால் மற்றவர்களுக்கு ஏன் சிரமம் கொடுக்க வேண்டும். இதன் மூலம் தேவையில்லாத செலவு வேறு என்று பல காரணங்களினால் தங்களின் உடல் நலத்திற்கு பெண்கள் அவ்வளவு அக்கறை கொடுப்பதில்லை. விளைவு ? தன்னால் முடியாத நிலையில்தான் மருத்துவரிடம் செல்வது "நோய் முற்றிய நிலையில் வந்துவிட்டீர்கள், இனி உங்களின் நோயைக் குணப்படுத்த முடியாது" என்றுமருத்துவர்கள் கூறும் நிலை உருவாகிறது. இதனால் பெண்களின் நோய்கள் அதிகரிக்க அவர்களின் ஆயுட்காலம் குறைகிறது. இதன் விளைவு மனைவியை இழந்த கணவன்மார்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது !

### இதற்கு என்னதான் தீர்வு ?

மனைவியர்களின் நலம் பேண, அதாவது ஆரோக்கியத்துடன் அதிக காலம் வாழும் கணவர்களாகிய உங்கள் கையில் தான் உள்ளது. முதலாவதாக ஒரு சில நாட்கள் மனைவியின் வேலைப்பாடுகளை கூர்ந்து கவனித்து அவர்கள் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் மற்றும் எதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதை கண்டறியுங்கள்.

**உதாரணம் :**

- அவர்கள் எந்த வேலையை செய்வதினால் மகிழ்ச்சியடைகிறார்கள்.
- உணவை சரியாக குறித்த நேரத்தில் உண்ணுகிறார்களா அல்லது காலம் கடந்து ஏதோ சாப்பிட்டால் போதும் என்று கடனுக்காக சாப்பிடுகிறார்களா ?
- அடிக்கடி உடம்பு சரியில்லை என்று சொல்லிக் கொண்டே, ஓய்வே இல்லாமல் உழைக்கிறார்களா ?
- அவர்களுக்கு என்று மகிழ்ச்சியாக இருக்க ஏதாவது ஒன்றை உங்களிடம் மறைமுகமாக தெரிவிக்கிறார்களா ?

### இதனை அறிந்த பின்னர் நீங்கள் செய்ய வேண்டியது இதோ :

- தினமும் குறைந்தது சில மணித்துளிகளாவது, அவர்கள் சொல்வதை மனம் உவந்து கேளுங்கள்
- மனைவியுடன் ஒரு வேளையாவது உணவை உண்ண முயற்சி செய்யுங்கள்
- மனைவிக்கு ஏதாவது ஒன்றில் மிகவும் விருப்பமாக இருக்கும். அதை அவள் உங்களுடன் நேரடியாக கூற மாட்டார்கள், நீங்கள் தான் அவர்களுடைய விருப்பத்தை மறைமுகமாக அறிந்து அதை நிறைவறவேற்றுங்கள். உதாரணம் : நகை, புடவை, சுற்றலா மற்றும் கோவில்களுக்கு செல்வது மற்றும் பிறந்த வீட்டிற்குச் செல்வது போன்றவைகள்
- உடல் நலம் சிறிது குறைந்தாலும், உடனே மருத்துவரின் உதவியை நாடுங்கள்
- இரவில் அதிக நேரம் கழித்து வீட்டிற்கு வந்து, நேரம் கழித்து உணவு உண்ண வேண்டாம், இது மறைமுகமாக மனைவியின் உடல் நலமும் பாதிக்கும்
- புகை, மது போன்ற தீய பழக்கங்களை அறவே ஒழித்து விடுங்கள்

– இரவில் நேரம் கழித்து வருவதாக இருந்தால் அதற்கான உண்மையான காரணத்தை முன்னரே தெரிவித்து விடுங்கள்

– ஒரேடியாக வேலை, வேலை என்று அலைந்து கொண்டு, குடும்பத்தை புறக்கணிக்க வேண்டாம். உங்களை நம்பி உங்கள் மனைவி மட்டுமல்ல ஒரு குடும்பமே இருக்கிறது

– மனைவியின் பெயரில் ஒரு வீட்டையோ அல்லது நிலத்தையோ உங்களின் வசதிற்குத் தகுந்தாற்போல் எழுதி வையுங்கள். மேலும் அவர்களின் பெயரில் ஒரு கணிசமான தொகையை வங்கியில் போட்டு வையுங்கள். இது உங்களுக்குப் பின்னால் யார் உதவுவார்கள் என்ற பயத்தைப் போக்க இது மிகவும் உதவும்.

*மனைவியின் நலமே குடும்பத்தின் நலம் !*

# இயற்கை மற்றும் யோக மருத்துவத் துறைக்கு தனியாக ஒரு மருத்துவமனை



சென்னை மந்தைவெளியில் உள்ள "டாக்டர் ஐஸ்வர்யா இயற்கை மருததுவமனையின்" முதல் தளத்தை பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ். நடராஜன் அவர்கள் பிப்ரவரி 15ந் தேதி அன்று திறந்து வைத்தார்.




## தன்னம்பிக்கைச் சிந்தனை

துதி பாடுபவர்களை விட குறை கூறுபவர்களே வணக்கத்திற்குரியவர்கள், ஏனென்றால் அவர்கள் தான் நமது வளர்ச்சிக்கு வழி சொல்லுகிறார்கள்!

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

இந்த மருத்துவமனையின் நிறுவனர் டாக்டர் ஐஸ்வர்யா அவர்கள் இயற்கை மற்றும் யோகவில் தேர்ச்சி பெற்றவர். இவர் மருத்துவமனையில் இயற்கை மருத்துவ துறைக்கு வேண்டிய யோக, உடற்பயிற்சி, அக்குபஞ்சர் மற்றும் மண் குளியல் போன்ற பல சிகிச்சை முறைகள் இடம் பெற்றுள்ளது ஒரு தனிச் சிறப்பு.





# உங்கள் குழந்தைமேல்

## உண்மையிலேயே அக்கறை இருக்கிறதா?

என் முன்னால் அவனை நிர்வாணமாக நிறுத்தியிருந்தார்கள்.

சுதந்திரா ஹாலிடே ஸ்கூல் நடத்துகிற மாணவர்களுக்கான 'ஜாலியாக படிக்கலாம் ஈஸியாக ஜெயிக்கலாம்' நிகழ்ச்சியில் கலந்து கொள்கிற பெற்றோர்கள் அந்த நிகழ்ச்சி அரங்கிலேயே நாங்கள் வழங்குகிற யோசனைகளால் நம்பிக்கை பெற்று தங்கள் குழந்தைகளிடம் உள்ள குறைகளை என்னிடம் தனிப்பட்ட முறையில் சொல்லி தீர்வு பெற விரும்புவதுண்டு. அன்றும் அப்படித்தான் நடந்தது.

சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நிகழ்ச்சி முடிந்து பங்கேற்பாளர்களுடன் நான் பேசிக்கொண்டிருக்கையில், உற்சாகமா? வருத்தமா? என என்ன உணர்ச்சி என்றே கண்டுபிடிக்க முடியாத நிலையில் ஒரு தந்தை தயங்கியபடிய இருந்த தன் மகனை இழுத்துக் கொண்டு வந்து என் முன் நிறுத்தினார்.

இவன் என் பையன், 10வது படிக்கிறான் என்றவுடன் ஹாய் என்று நான் அவனை உற்சாகமாய் பார்க்க ஒண்ணுக்கும் லாயக்கில்ல. புக்கை கையில எடுக்கிறதே இல்லை. எல்லா சப்ஜெக்ட்லையும் ஜஸ்ட் பாஸ் புரோகிராமுக்கு கூட வரமாட்டேன்னு ஒரே அடம். நீங்கதான் ஏதாவது பண்ணணும் என்று ஆரம்பித்தவர் நான் ஸ்டாப்பாக பேசிக் கொண்டிருந்தார். என்னை எதுவும் பேச விடாமல் அந்தக் குழந்தைக்கும் எனக்கு ஒரு நட்பை ஏற்படுத்திக்கொள்ள அவகாசம் தராமல் முதலில் அவன் சட்டையை கழற்றினார்.

எங்களைச் சுற்றி தங்கள் குழந்தைகளோடு நின்று கொண்டிருந்தவர்கள் அவரையும் அவனையும் மாறி மாறி பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதுபற்றி அவர் கொஞ்சமும் கவலைப்பட்டதாக தெரியவில்லை. அவர் பாட்டிற்கு தொடர்ந்தார் பிறகு குழந்தையின் பனியனை கழட்டினார்.

இன்னும் சில சில நொடிகளிலேயே தங்கள் குழந்தைகள் பற்றி அத்தனை குறைகளையும் சொல்லி குழந்தைகளை அம்மணமாக்கி என் முன் நிறுத்திடுவார்கள். அன்றும் அதுதான் நடந்தது அந்தக் குழந்தையை விட நான் அதிகம் அவமானப்பட்டேன்.



பயிற்சி வகுப்பில் நாங்கள் பங்கேற்பாளர் களோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள நெருக்கம் கூட இந்த மாதிரியான செயல்களால் அழிந்து விடுகிறது. நல்ல மார்க் எடுக்கணும்னு நினைக்கிறான். இவனுக்கு உங்கள் வழிகாட்டுதல் வேணும் என்று சொல்லி அறிமுகப்படுத்தலாம்.

என் பையன் புத்திசாலிதான். ஆனால் கொஞ்சம் விளையாட்டுத்தனமாக இருக்கிறான் என்றால்கூட பரவாயில்லை. ஆனால் குழந்தைகளை என்னிடம் அறிமுகப்படுத்த விரும்பும் பல பெற்றோர்கள் குழந்தைகளை பற்றி குறையான குறை சொல்லி படுத்திவிடுகிறார்கள்.

இதனாலேயே என்னை சந்திக்க குழந்தைகளோடு வருபவர்களை குழந்தைகள் தனியாகவும் பெற்றோர்களோடு தனியாகவும் நான் பேசுவது வழக்கம். கவுன்சிலிங் ரூமில் பெற்றோர்களை சந்தித்துவிட்டு குழந்தைகளை அழைத்தால், பெற்றோர்கள் குறைசொன்னால் குழந்தையின் முகம் எப்படி வாடுமோ, அதே வாட்டத்தோடுதான் உள்ளே வருவார்கள்.

பிறகுதான் புரிந்தது தன் பெற்றோர் தன்னைப்பற்றி யாரிடமும் பாராட்டி பேசியதில்லை என்றே பல குழந்தைகள் என் முகத்தில் அறைந்து சொன்னார்கள். இன்னும் நான் செய்யத்தவறிய பணிகளை எனக்கு உணர்த்தினார்கள்.

குழந்தையின் பிரச்சனைகளை அவர்களை விட்டே மனம் விட்டு பேசுகிற அளவிற்கு பேச வைக்க எங்களால் முடியும். ஆனால் அதற்கான வாய்ப்பே இல்லாதபடி பல பெற்றோர்களின் இவ்வகை அறிமுகங்கள் அமைந்துவிடுகிறது.

கவுன்சிலிங் என்றால் வரமாட்டார்கள் என்று எதையாவது சொல்லி அழைத்து வந்து திடீரென்று மிரள மிரள என் முன்னால் உட்கார வைத்து குற்றப்பத்திரிகைகளை வாசிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.

'அழாத இப்ப என்ன சொல்லிட்டேன், எல்லாம் நடிப்பு சார்' என்பவர்களும் உண்டு. இப்படி சிலர் நடந்து கொள்ளும்போது எனக்கு வியட்நாமில் விழுந்த குண்டில் தன் ஆடை எரிந்து கதறியபடி ஓடிவரும் குழந்தையின் காட்சி ஏனோ நினைவுக்கு வரும்.

பெற்றோர்கள் வீசுகிற சில வார்த்தைகள், ஆசிட் முகத்தில் செய்கிற வேலையை குழந்தைகளின் மனதில் செய்துவிடும்.

என்னிடம்தான் என்றில்லை, கண்ணில் படுகிறவர்களிடமெல்லாம் தன் குழந்தை களைப்பற்றிய குறைகளைச் சொல்லிதன் மனதில் உள்ள பாரத்தை இறக்கிவிடுவார்கள் குழந்தைகள் மனதில் பாரத்தை ஏற்றிவிடுவார்கள்.

உன்னை நினைச்சுத்தான் உங்கப்பா கவலைப்படறார் என்று வீட்டிற்கு வருபவர்கள் சொன்னதற்கு பிறகுதான் வீட்டில் உள்ளவர்கள் செய்துள்ள எல்லை தாண்டிய பயங்கரவாதம் தெரியவரும்.

குழந்தை யாரிடம் பிரியமாக இருக்கிறதோ அவர்களிடம்தான் முதலில் சொல்வார்கள். குழந்தை மாமாவிடம் பிரியமாக இருக்கிறது என்றால், மாமா வீட்டிற்குள் நுழையும்போது, உன் மருமகன் இன்னிக்கு என்ன செய்தான் தெரியுமா? என்று கச்சேரியை ஆரம்பித்து விடுவார்கள். அவர் ஏதாவது விட்டுக்கொடுக்காமல் பேசினாலும் நீதான் உன் மருமகனை மெச்சிக்கணும் என்று ஆரம்பித்து இன்னும் இரண்டு குறைகளை சொல்லி அவர்களையும் சீக்கிரமே குழந்தையை வெறுக்க வைக்கும் எல்லா முயற்சியையும் தொடங்கிவிடுவார்கள்.

சில நேரங்களில் காலாண்டு தேர்வில் என்ன மார்க்? என்று கேட்டு வீட்டுக்கு வருபவர்கள்கூட துகில் உரிவதுண்டு இது கூட ஒருவகை சாடிஸம்தான்.

உறவுக்காரர்களிடம் இப்படி அவமானப்படும் குழந்தைகள் அவர்களிடம் எப்படி பழகும்? யாரோடும் சரியாகப் பழகுவதில்லை என்று பிறகு குறையும் பட்டுக்கொள்வார்கள்.

மற்றவர்களிடம் சொல்வதுதான் என்றில்லை. உடன் பிறந்தவர்களிடம் சொல்வதும் அவர்களோடு ஒப்பிட்டு பேசுவதும் கூட அம்மணப்படுத்துவதுதான்.

சிறுவயதிலிருந்தே அங்கிளுக்கு டான்ஸ் ஆடிக்காமி ரைம்ஸ் சொல்லிக்காமி. என்று பல பெற்றோர்களுக்கு குழந்தைகள் பெருமையடைவதற்கான வழிமுறைகளாக மட்டுமே இருக்கிறார்கள்.

வளர்ந்த பிறகு இவர்கள் காட்டி பெருமைப்பட வேண்டும் என்று நினைக்கும் விஷயங்களில் இல்லாமல் வேறு ஏதாவது விஷயங்களில் குழந்தைகளை ஈடுபாடு காட்டினால் அவர்களை துவம்சம் செய்து விடுகிறார்கள்.

பிதாவே இவர்களை மன்னியும் இவர்கள் இன்னது செய்கிறோம் என்று அறியாதிருக்கிறார்கள் என்று விட்டு விட முடியாது கொஞ்சம் யோசித்தாலே இதனால் குழந்தைகள் படுகிற வலியை உணர்ந்து விடமுடியும்.

உங்கள் கணவரை அவரது உறவினர்களிடம்

அல்லது உங்கள் மனைவியை அவரது உறவினர்களிடம் இது போல விட்டுக்கொடுத்து பேசினால் என்ன ஆகும் என்று கற்பனை செய்து பாருங்கள் பிறகு உங்களுக்கே புரியும் இதனால் குழந்தைகள் எந்த அளவிற்கு காயப்பட்டிருப்பார்கள் என்பது.

குறைகளை எங்களிடம் சொல்லுங்கள். நிறைகளை மற்றவர்களிடம் சொல்லுங்கள் என்று ஹோட்டலுக்கு ஹோட்டல் எழுதிப் போட்டிருக்கிறார்கள். இன்னும் கூடவா நமக்கு புரியவில்லை.

உங்கள் குழந்தைகளின் குறைகளை உறவினர்களிடம் நண்பர்களிடம் சொல்வதால் ஒரு பிரயோஜனமும் இருக்கப்போவதுமில்லை. இதனால் குழந்தைகளின் மனதில் தாழ்வு மனப்பான்மையும் மற்றவர்கள் மீது ஒரு வெறுப்பும்தான் ஏற்படப்போகிறது.

இதனால் ஏற்பட்ட இடைவெளியால் உங்களைப்பற்றிய குறையோடு வளர்வார்கள். பிற்காலத்தில் உங்கள் குறைகளை உங்களிடமே சொல்லிக் கொண்டிருப்பார்கள் குறைசொல்வதை உங்களிடம் இருந்ததுதான் கற்றுக்கொள்வார்கள்.

உங்க கிளாஸ் அட்டெண்ட் பண்ணதுக்கு பிறகும் ஒருமாற்றமுமில்லை என்று சிலர் என்னையும் சேர்த்து நெளிய வைப்பதுண்டு

இத்தகைய பெற்றோர்களின் குழந்தைகளுக்கு எங்களைப்போன்றவர்கள் வழங்கும் பயிற்சி ஓட்டைப்பானையில் ஊற்றிய தண்ணீராகிவிடுகிறது. நாங்கள் என்ன தான் உலகையே வெல்ல முடியும் என்று நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியிருந்தாலும் வழக்கம்போல இந்த கிளாஸுக்கு கட்டின பீசும் தண்டம்தான் என்று ஒரே வார்த்தையில் குழந்தைகளின் உற்சாகத்தை வடித்துவிடுவார்கள்.

நீங்கள் மற்றவர்களிடம் உங்கள் குழந்தைகளைப்பற்றி சொல்கிற எல்லாம் மனம் விட்டு பேசினால் நீங்களே சரி செய்துவிடுகிற விஷயங்கள்தான். பல நேரங்களில் எதையெல்லாம் செய்ய வேண்டும் என்று பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிந்தாலும் குழந்தைகள் மனதில் இருக்கும் காயங்கள் அவர்களை செய்யவிடுவதில்லை

உண்மையிலேயே உங்களுக்கு குழந்தைமேல் அக்கறை இருந்தால் தயவுசெய்து உங்கள் குழந்தைகளின் ஆடைகளை களையாதீர்கள்.

உங்கள் குழந்தைகளை நீங்கள் நேசித்தால் மற்றவர்களிடம் உங்கள் குழந்தைகளின் சிறப்புகளை மட்டுமே பேசுங்கள். இது நீங்கள் வீட்டிற்குள் பெற்றே ஆக வேண்டிய வெற்றி.

நன்றி,

– கிருஷ்ணன் வரதராஜன்

# அறம் செய்ய விரும்பு

அறம் எனப்படுவது பிறர் மகிழ்ப் பிறக்கும் நம் புன்னகையே மீப்பெரும் அறம் என்பர்.மனித சமூகம் மூச்சிழுக்க மரம் வேண்டும், முன்னேற அறம் வேண்டும். தமிழகத்தின் கொங்கு மண்ணே நம் சமூக இடமாக இருப்பினும்,இன்று மாநிலத்தின் தலைநகரிலும் நமக்கென தனிப்பெரும் அடையாளமாய் நம்மவர்கள் பலர் பல்வேறுபட்ட தொழில்களிலும், பணிகளிலும் பெருமுயற்சியோடும் உழைப்போடும் உயர்ந்து நிற்கிறோம்.

நம்முடைய சமூக முன்னோர்களின் பெரு முயற்சியால் தொடங்கப்பட்ட "சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்" நமது வீடுகளின் அடுத்த தலைமுறைக்காக பல்வேறு முன்னெடுப்புகளை அன்று முதல் இன்று வரை வழங்கிக் கொண்டுள்ளது. அந்த வரிசையில் நமது கொங்கு மாணவர் விடுதியானது மிகக்குறைந்த கட்டணத்தில் தரமான தங்கும் விடுதியாக செயல்பட்டு வருகிறது. மனிதர்களின் வயது மூப்பால் சருமம் சுருங்குவது மாதிரி நம்முடைய விடுதியின் உள்கட்டமைப்பிலும் சிறு சிறு முன்னேற்றங்கள் தேவைப்படுகின்றன. அறைகளை புதுப்பிக்கும் முயற்சியில் அடியெடுத்து வைத்துள்ளோம்.

நமது உறவுகளின் அன்பாதரவுடன் இந்த புதுப்பித்தல் பணியினைச் செய்திட எத்தனித்துள்ளோம். நம் கனவுகளையும் நம்மின் பெருமைகளையும் இம்மண்ணிற்கு மகுடமாய் காட்சிப்படுத்த பயணிக்கும் நம் அடுத்த தலைமுறை பிள்ளைகளுக்காய் இந்த விடுதி உங்கள் ஆதரவுடன் புதுப்பொலிவு பெற்று, நம் குழந்தைகளை அரவணைக்கும் என்று பேராசை கொண்டு அறப்பணிக்காய் அன்பு உறவுகளை அழைக்கின்றோம்.

**முழங்கிடுவோம்! முயன்றிடுவோம்!**
**முன்னேற்றிடுவோம்!!**
**முன்னேறிடுவோம்!!!**

– நன்றி, தமிழன் ராகுல் காந்தி


HOTEL
ASHOK PALACE
Right Choice
for your stay
Restaurant
Hall
Rooms
Bar
ஹோட்டல் அசோக் பேலஸ் HOTEL ASHOK PALACE
+91 96262 50022 | +91 96262 51166
ashokpalacerestaurant@gmail.com | info@ashokpalace.com
#1 / 289, Salem Bye-pass, Semmadai, Manmangalam P.O. Karur - 639 006.





# விண்வெளித்துறை முன்னோடி

## பத்மஸ்ரீ டாக்டர் ஆர்.எம்.வாசகம்

அறிவியல் தொழில்நுட்பக் கல்வியிலும் விண்வெளி ஆராய்ச்சி துறையிலும் தடம் பதித்து, அடுத்தடுத்த தலைமுறைகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்த ஆர்.எம்.வாசகம் (ராமசாமி மாணிக்கவவாசகம்) மறைந்துவிட்டார். முதல் தலைமுறை இந்திய அறிவியலாளர்களில் மிக முக்கியமான ஆளுமை இவர்.

### சாதனை செய்த பொறியாளர்

ஆர்.எம்.வாசகம் என அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் ராமசாமி மாணிக்கவாசகம், ஈரோட்டில் பிறந்து, கோவை வி.எஸ்.ஜி. தொழில்நுட்பக் கல்லூரியில் இளங்கலை பொறியியலும், மெட்ராஸ் ஐஐடி–யில் முதுநிலைப் பொறியியலும் படித்தவர். இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தில், அதன் ஆரம்பக் காலத்தில் சேர்ந்த இந்தியப் பொறியாளர்களில் இவரும் ஒருவர். ஏவுகலன் தொழில்நுட்பம், செயற்கைகோள் தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சிகளுக்குத் தேவையான முன்னோக்கிய பார்வை, பெரிய குழுவை முன்னெடுத்துச் செல்லும் தலைமைப் பண்பு உள்ளிட்ட பன்முகத் திறமைகள்தான் விண்வெளி அறிவியல் தொழில்நுட்பத்தின் முக்கிய அங்கங்கள். இவை எல்லாவற்றிலும் சிறந்து விளங்கியவர் ஆர்.எம்.வாசகம்.

1981இல் இந்திய விண்வெளி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு, முதல் முறையாக 36,000கி.மீ. உயரப் புவிவட்டப் பாதையில் நிலைநிறுத்தப்பட்ட முதல் தொலைத்தொடர்புக்கான செயற்கைக்கோளான– ‘ஆப்பிள்’ (Ariane Passenger Payload Experiment - APPLE) திட்டத்தின் திட்ட இயக்குநராக இருந்தவர் ஆர்.எம்.வாசகம், ஐரோப்பிய நாடுகளின் ஒன்றிணைந்த குழுவால் விண்ணுக்கு முதல் முதலாக அனுப்பப்பட்ட ‘ஏரியேன்’ விண்கலத்தில் சென்ற முதல் ஆசிய செயற்கைக்கோள் என்கிற பெருமையை நமது இந்தியச் செயற்கைக்கோளுக்குப் பெற்றுத் தந்த பெருமையும் அவரையே சாரும். இந்தத் திட்டத்துக்குக் கிடைத்த வெற்றி பின்னாளில் இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளுடன் கூட்டாக உயர்நிலை விண்வெளி ஆராய்ச்சிப் பணிகள் செய்யத் தூண்டுகோலாக இருந்தது.

### திறன் வாய்ந்த ஏவுகலன்கள்

செயற்கைக்கோள் அறிவியல் தொழில்நுட்பத்தில் ஏற்படுத்திய புதுமையைத் தாண்டி, இந்தியாவுக்குத் தேவையான விண்வெளி சார்ந்த பயன்பாடுகளுக்கான பல புதிய நடைமுறைகளுக்கும் ஆப்பிள் வழிவகுத்தது.



இந்தியாவில் இப்போது செயல்பாட்டில் உள்ள தொலைத்தொடர்புத் திட்டங்களுக்கான முன்னோடி 'ஆப்பிள்' 1980களில் இந்திய விண்வெளி ஆராய்ச்சியில், எஸ்.எல்.வி–க்கு அடுத்து, புதிய திறன் வாய்ந்த ஏவுகலன்களுக்காள பாதை வகுக்கப்பட்டபோது, அதில் மிக முக்கிய பங்களிப்பைத் தந்தவர் ஆர்.எம்.வாசகம், இப்போது பரவலாக அறிமுகமாகியுள்ள பல முன்னணி இந்திய விண்வெளி அறிவியலாளர்கள், ஊடகங்களின் விரிவும் தாக்கமும் அதிகம் இல்லாத 1980களின் ஆரம்பத்தில் இந்திய விண்வெளி ஆய்வுக்களத்தில் சேர்ந்தவர்கள் போன்றோர், 'ஆப்பிள்' பரிசோதனைக்குப் பின் அரசின் ஒப்புதலால் உருவான பல்வேறு விண்வெளித் திட்டங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். இன்றைய விண்வெளித் திட்டங்களுக்கான காரணிகளில் ஆர்.எம்.வாசகமும் ஒருவர் என்பது மிகவும் பொருத்தம்.

### சிறந்த கல்வியாளர் :

தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தை நூலகத்திலும் நூல்கள் மத்தியிலும் அதிகம் கழித்த மாணிக்கவாசகம், சக அறிவியலாளர்களிடையே 'நடமாடும் நூலகம்' என்றும் 'அறிவியல் களஞ்சியம் என்றும் செல்லமாக அறியப்பட்டவர்.

நவீன உலகின் முன்னேறிய நாடுகள், மிகச் சிறந்த அறிவியலாளர்களை நல்ல கல்வியாளர்களாய் மாணவர்களிடம் முன்னிறுத்தி வெற்றிகண்டுள்ளன. 1996ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திலிருந்து விருப்ப ஓய்வு பெற்ற ஆர்.எம்.வாசகத்தை, தமிழகம் இருகரம் நீட்டி வரவேற்று அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தராக்கிக் கௌரவித்தது. மாணவர்களாலும் செயற்கைக்கோள்கள் செய்ய முடியும் என்பதற்கு விதை போட்டு, பின்னாளில் இந்தியாவின் முதல் மாணவர் செயற்கைக்கோளான "அனுசாட்"டுக்கு அவர் வழிவகுத்தார். தனது கடைசி நாள்கள் வரை, பல கல்வி நிறுவனங்களின் மாறிவரும் காலத்துக்கேற்ற வளர்ச்சிக்கு அவர் காரணமாக இருந்தார்.

பத்மஸ்ரீ விருது, இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்தால் வழங்கப்படும் உயரிய விருதுகளில் ஒன்றான "ஹரி ஓம் ஆஷ்ரம் பிரிடிட் விக்ரம் சாராபாய்" அறிவியல் விருது, சர்வதேச அளவிலான மின் – மின்னணுப் பொறியாளர்கள் நிறுவன விருது (IEEE Award) எனப் பல பெருமைமிகு விருதுகளைப் பெற்றவர் ஆர்.எம்.வாசகம். அவரது இறுதிச் சடங்கு மனைவி, இருமகள்கள் மட்டும் கலந்துகொண்ட ஒரு சாதாரண நிகழ்வாக மட்டுமே நடந்தது, அறிவியல் உலகைத் தாண்டி இன்றைய சமுதாயம் உணர்ந்துகொள்ள வேண்டிய இன்னொரு பாடம்!

- நன்றி, திரு. மயில்சாமி அண்ணாதுரை,
இந்து தமிழ் திசை

### தன்னம்பிக்கைச் சிந்தனை

தொடர்ச்சியான பயிற்சி
முயற்சிக்கு மூலதனமாகிறது.
தொடர் முயற்சி தோல்வியைத் துரத்தி
அடிக்கிறது.


- சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

வாழ்த்துகிறோம்




200 விமானங்களை உற்பத்தி செய்து வழங்குவதற்காக சக்தி விமானத் தொழிற்சாலை (பொள்ளாச்சி சக்தி குழுமம், கோயம்புத்தூர்) மற்றும் ஏரோ கிளப் ஆஃப் இந்தியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது-இவ்விழா 11-03-2025 அன்று புது டெல்லியில் நடைபெற்றது.

## ஸ்ரீ மஹா சோளியம்மன் திருக்கோவில்



கரூர், ஆத்தூர்
அருள்மிகு மகா சோளியம்மன் திருக்கோயில் திருக்குடமுழுக்குப் பெருவிழா **10.03.2025** அன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

### தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

இலட்சியத்தை நோக்கி உழைத்துக் கொண்டே இருங்கள். காலம் காத்திருக்கிறது கனவுகளை நனவுகளாக்குவதற்காக.

– சிந்தனைக் கவிஞர் கவிதாசன்



## அருள்மிகு குலவிளக்கம்மன் அருள்மிகு மத்தியபுரி ஈஸ்வரர் அருள்மிகு கல்யாண வரதராசப் பெருமாள் சுவாமி திருக்கோயில்கள்

நஞ்சைகாளமங்கலம், மொடக்குறிச்சி வட்டம், ஈரோடு மாவட்டம் - 638 153

**பங்குனித் திருத்தேர்த்திருவிழா - 2025**

பங்குனி மாதம் 18ம் நாள் (01-04-2025)
பங்குனி மாதம் 29ம் நாள் (12-04-2025) முடிய

**திருத்தேர் வடம் பிடித்தல்**

குரோதி வருடம் பங்குனி மாதம் 27ம் நாள் (10-04-2025) வியாழக்கிழமை
காலை 9.00 மாலை 4.30 மணி

## பழையகோட்டை அருள்மிகு ஆனூர் அம்மன் தேர்த்திருவிழா - 2025



22-03-2025 முதல் 31-03-2025 முடிய

**திருத்தேர்வடம் பிடித்தல்**

30-03-2025 காலை 6.00 மணி முதல் 6.45 மணி முதல் திருத்தேல் வடம் பிடித்து நிலைபெயர்த்தல்.
மாலை 5.00 மணிக்கு திருத்தேர் வடம் பிடித்து நிலை சேர்த்தல்


SGS
SENGODA GOUNDER & SONS
LARGEST SOURCES FOR INDUCTION HARDENING OF METAL COMPONENTS
300KW- 3 KHz Induction Hardening Machine for hardening of metal components upto 10T.wt Shafts & 6 mts Dia Wheels Etc.
Also we have 15KW, 30KW, 100KW, 150KW & 250KW High & Medium frequency Induction hardening machines 14 Nos & Do Hardening, Brazing, Annealing, Sheet Metal forming etc.,
Equipped Lab, Micro hardness tester etc., in house
Approved sources for all leading OEM like Ashok Leyland, TVS Group Companies, Hyundai, Tafe, TI etc., and a ISO Company
for details see of website
L10 & 11, Industrial Estate, Ambattur, Chennai - 600 058.
Email : aruna.sgs10@gmail.com; Web: www.sgschennai.com
Contact : 044- 48555682 / Cell : 98410 40228 / 94458 30351

# பரம்பிக்குளம் - ஆழியாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் தந்தை




பல்லாயிராம் ஆண்டுகளுக்கு முன்பு பாடினாலும் இன்றும் நிலைத்து நின்று பொருள்தரும் புறநானூற்றுப் பாடல் ஒன்று உண்டு.

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே;
நீரும் நிலனும் புணியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினாரே;
.........................
நிலன் நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
தள்ளாதார் இவண் தள்ளாதோரே
பாண்டியன் நெடுஞ்செழியனை
குடபுலவியனார் பாடிய புறநானூற்றுப் பாடல்

உலகத்து உயிர்களுக்கு எல்லாம் வாழ்வளிப்பது உணவே ஆகும். அந்த உணவை வழங்குவது நிலமும், நீரும் இணைந்திருப்பது மிக மிக அவசியம் ஆகும். அவ்வாறு நிலத்தையும், நீரையும் ஒருங்கிணைப்பது ஒன்றே உலகின் அறங்களில் எல்லாம் உயர்ந்தது ஆகும். பல்வேறு தன்னிறைவு பெற்ற நாடுகள் எல்லாம் பெரும் நீர்பாசனத் திட்டங்களை தன்னகத்தே கொண்டுள்ளன. நம் நாட்டிலும் காவிரியின் குறுக்கே கல்லணையைக் கட்டிய கரிகால்சோழன், பவானியின் குறுக்கே அணைகட்டி கால்வாய் வெட்டிய காலிங்கராயன் ஆகியோரின் பெயர் இன்றும் நிலைத்து நிற்கிறது. அவ்வகையில் வைத்து எண்ணத்தக்க சீரும் சிறப்பும் பெற்ற ஒரு திட்டம் பரம்பிக்குளம் திட்டமாகும், தென்கொங்கு நாட்டின் வறண்ட நிலங்களை எல்லாம் வளமான பூமியாக மாற்றிய பெருமை இத்திட்டத்துக்கு உண்டு, இத்திட்டத்தின் அடிநாதமாக இருந்தவர் திரு.வி.கே.பழனிச்சாமி கவுண்டர் என்று வரலாறு கூறுகிறது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முந்தைய காலகட்டம். திரு.வி.கே.பழனிச்சாமிக்கவுண்டரின் குடும்பம் செல்வப் பாரம்பரியம் கொண்டது. அவர்களின் பண்ணையில் ஆடு, மாடு பசு, குதிரை இவற்றோடு யானைகளும் உண்டு. யானைகளை பேணிப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும், அவற்றிற்கான பணிகளை ஒதுக்கி செய்து முடிப்பதற்கும் தகுந்த பலர் இருந்தனர். பொதுவாக யானைகள் மலைப்பகுதிகளில் பெரிய மரத்துண்டுகளை கையாள மலைமேல் சென்று மேற்பார்வை இடுவது உண்டு ஒய்வு கிடைக்கும் போது சுற்றியுள்ள வனப்பகுதிகளை சென்று பார்ப்பர்.

ஒருமுறை கடும் கோடைக்காலம் எங்கும் வெயிலின் கொடுமை வாட்டியது. அச்சமயம் வி.கே.பி மலைப்பகுதிக்கு சென்றிருந்தார், மதிய உணவு வேளையின் போதுகூட சில்லென்று குளிர்ந்த காற்று வீசிக் கொண்டிருந்தது. அதற்குக் காரணம் அருகே ஓடிக்கொண்டிருந்த நதியும் அதனால் உருவான சோலைகளும்தான் என்று தெரிந்து கொண்டார். அந்த கோடை காலத்திலும் வற்றாமல் ஓடி அந்த நதி எங்கே போகின்றது என்று விசாரித்தார். மலையில் உருவாகும்



**பிப்ரவரி 28 அன்று பிறந்தநாள் போற்றி வணங்குவோம்**

அந்த நதி நேராக கடலில் சென்று விழுகிறது என்று அறிந்தவுடன் அதிர்ந்து போனார். ஆனைமலையின் கிழக்குப் பகுதியில் நிலங்கள் எல்லாம் வறண்டு, வளமிழந்து கிடக்கிறது. மேற்கில் ஏராளமான தண்ணீர் யாருக்கும் பயனின்றி நேராக கடலில் சென்று கலக்கிறதே. அந்தத் தண்ணீரை கிழக்கு நோக்கி திருப்பிக் கீழே கொண்டுவர இயலாதா என்று வி.கே.பி–ன் இளையமனம் சிந்தித்தது.




நிலத்தையும், நீரையும் இணைக்கும் உயரிய எண்ணம் இவ்வாறு அவர் மனதில் உதித்தது. தன்னைச் சுற்றி இருந்த உறவினர்கள், நண்பர்கள், பெரியோர் என அனைவரிடமும் இது குறித்து விவாதித்தார். வறண்டு கிடக்கும் நிலத்துக்கு, நீர் கிடைத்தால் நல்லது. ஆனால், மேற்கு நோக்கி அவ்வளவு உயரத்தில் பாயும் நீரை திருப்பி கீழேகொண்டுவருவது சாத்தியமே இல்லை என்று அனைவரும் கூறினர். வி.கே.பி–யின் உள் மனம் இதை ஒப்புக் கொள்ளவில்லை. எப்படியும் கொண்டு வரமுடியும் என அவர் நம்பினார். அதற்கு ஆதரவளிப்பது போல ஒரு செய்தி கிடைத்தது. பெரியாற்றின் குறுக்கே ஒரு அணை இவ்வாறு கட்டப்பட்டு கிழக்கில் உள்ள பகுதிகள் பாசனம் பெறுவதை அறிந்தவுடன் அவர் நம்பிக்கை வலுப்பட்டது.

இச்சூழலில் 1937–ல் இவர் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினர் ஆனார். சட்டமன்றத்தில், இவர் எழுப்பிய கோரிக்கை பதிவு செய்யப்பட்டதே தவிர செயல் வடிவம் பெறவில்லை தொடர்ந்து பல ஆண்டுகள் சட்டமன்றத்தில் குரல் எழுப்பி வந்தார். அவருக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பரம்பிக்குளம் திட்டம் பற்றியே பேசுவார்.

இந்நிலையில் நாடு சுதந்திரம் பெற்றது. வி.கே.பி.அரசியல் முதிர்ச்சி பெற்று. கோயமுத்தூர் மாவட்ட அளவில், பெரும் தலைவராகத் திகழ்ந்தார். சுதந்திர இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முழுக்க, முழுக்க விவசாய முன்னேற்றம் சார்ந்து தீட்டப்பட்டது. நாடெங்கும் அணைக்கட்டுகள் கட்டப்பெற்றன. உணவு உற்பத்தி பெருகத் தொடங்கியது. சென்னை மாகாணத்திலும் அணைக்கட்டுகள் கட்டப்படத் தொடங்கின. ஆனால் பரம்பிக்குளம் திட்டம் மட்டும் ஆய்வு வடிவம் கூட பெறவில்லை. அதற்குக் காரணம் இத்திட்டம் மிகக் கடுமையான, நடைபெற சாத்தியமற்ற பணி அதிக செலவு பிடிக்கக்ககூடிய ஒன்று என்று நம்பப்பட்டதுதான் ஆகும்.

ஆனால் வி.கே.பி. மனம் தளரவில்லை. தொடர்ந்து போராடி வந்தார். பொள்ளாச்சி பகுதியில் இருந்து சி.சுப்பிரமணியம் என்.மகாலிங்கம் போன்றோர் அரசியல் ஆளுமை பெற்று இத்திட்டத்துக்கு ஆதரவு அளித்தனர். இந்நிலையில் மொழி வாரி மாகாணங்கள் என மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. தமிழ்நாட்டின் நீர்வளம் மிகக் குறைந்தது. உணவு உற்பத்தி குறையும் நிலை தோன்றியது. வி.கே.பி. இதைச் சுட்டிக்காட்டினார். மேற்குத் தமிழ்நாட்டில் பரம்பிக்குளம் திட்டம் நிறைவேற்றப்பட்டால் குறைந்தது இரண்டு லட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெற்று பயன் அளிக்கும். உணவு உற்பத்தி பெருகும் எனக் கூறினார். இதற்காக அன்றைய முதல்வர் திரு.காமராஜரையும், நீர்பாசனத்துறை அமைச்சர் திரு.கக்கனையும் தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். அவரின் தொடர்ந்த முயற்சிகளும், வற்புறுத்தல்களும் பயனளித்தன. முதல்வர் காமராஜர் பொதுப்பணித்துறைக்கு இத்திட்டம் குறித்து ஆராயுமாறு உத்தரவிட்டார். இதற்கென தலைசிறந்த பொறியாளராக திரு.ஆனந்தராவ் நியமிக்கப்பட்டார்.

திரு.ஆனந்தராவ் பொள்ளாச்சி வந்து சேர்ந்தார். இத்திட்டத்தை மனதில் நெடுநாளாய் சுமந்து கிடந்த வி.கே.பி. அவரைச் சந்தித்து சர்வே செய்ய உடன் வருவதாக ஒப்புக் கொண்டார். மலைப்பகுதியில் மேலே செல்வதற்கு பாதைகள் ஏதும் கிடையாது. ஆதிவாசிகளும் யானையும் பயன்படுத்தும் பாதைதான் ஒன்று இருந்தது. ஆனந்தராவ், வி.கே.பி. மற்றும் குழுவினர் யானைகளின் மீதேறி புறப்பட்டனர். பாதி வழியில் சூறாவளிக் காற்றும், மழையும் அவர்களை எதிர் கொண்டன. கொண்டுசென்ற உணவுப்பொருட்கள் உட்பட பெரும்பாலானவை சேதம் அடைந்தன. ஆனால் மனம் கலங்காத வி.கே.பி.யும் ஆனந்தராவும் மேலும் பயணத்தைத் தொடர்ந்தனர். இயற்கையும் தன் சீற்றத்தைச் சற்று தணித்துக்கொண்டது.



குறிப்பு : பரம்பிக்குளம் தொடக்கவிழாவின்போது பிரதமர் நேருவுடன், சி.சுப்பிரமணியம்
நா.மகாலிங்கம், வி.கே.பழனிச்சாமிக்கவுண்டர், டாக்டர் பி.சுப்பராயன்

ஆற்றின் கரைகளில் (பாறைமீது) நின்று ஆனந்தராவ் அளவீடுகளை எடுத்துக்கொண்டார். பிறகு வி.கே.பி. யிடம் செய்ய முடியாதது எதுவும் இல்லை. ஆனால் இத்திட்டம் சாதாரணமாக முடியாது. அதிகம் சிரமமான ஒன்று எனக் கூறினார். கீழே மக்கள் குடிநீருக்குக்கூட வழியின்றி பஞ்சம் பிழைக்க போவதும் பசியால் வாடும் சிரமத்தைவிட இது பெரிய சிரமமா? என்று எண்ணிப் பாருங்கள் என்று வி.கே.பி. கேட்டுக்கொண்டார். தலைசிறந்த பொறியாளர் என்பதோடு மக்கள் நலனிலும் அக்கறை கொண்ட ஆனந்தராவ் திட்டம் ஏற்புடையது என அறிக்கை தந்தார்.

அடுத்து அரசாங்கத்துறை நடவடிக்கைகள் தொடங்கி ஒவ்வொரு நிலையிலும் வி.கே.பி. தொடர்ந்து வற்புறுத்தி வந்தார். இறுதியாக 1956 ஆம் ஆண்டு பரம்பிக்குளம் திட்டம் பணிகள்மாறுதல்களுடன் தொடங்கப்பட்டன. வி.கே.பி. ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினார். திட்டம் தொடங்கியதோடு தம் பணி முடிந்தது என்று எண்ணாமல் தொடர்ந்து அப்பணிகளில் ஒத்துழைத்து வந்தார். சென்னை அலுவலகக் கோப்புகள் தொடங்கி, திட்டப்பணிகள் நடைபெறும் இடம் வரை சென்று ஒவ்வொரு நிலையிலும் அவர் பங்கேற்றது அவரின் உள்ளார்ந்த ஈடுபாட்டையும் அர்ப்பணிப்பு உணர்வையும் காட்டுகிறது. இச்சமயங்களில் திரு.சி.சுப்பிரமணியம் திரு.என்.மகாலிங்கம் ஆகியோரின் பங்களிப்பும் குறைந்ததன்று. பொள்ளாச்சி தொகுதியின் அன்றைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு.என்.மகாலிங்கம் இத்திட்டத்தில் அரும்பாடுபட்டார்.

வராது வந்த மாமணிபோல் வந்த இந்தத்திட்டம் முதல் கட்டப் பணிகள் முடிவுற்று 1957 ஆம் ஆண்டு அன்றைய பாரதப் பிரதமர் திரு.ஜவஹர்லால் நேரு அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. முதல்வர் காமராஜர் உள்ளிட்ட பல பெருமக்கள் கலந்து கொண்டனர்.

மழையின்றி வளம்குன்றி இருந்த பகுதிகளெல்லாம் இத்திட்டத்தின் வரவால் பாசன வசதி பெற்றன. உணவு உற்பத்தி பெருகியது. விவசாயிகளின் நிலை உயர்ந்தது. பொதுநல நோக்குடன் செயல்பட்டதால் வி.கே.பி. என்ற இளைஞரின் கனவு தொடர்ந்து பல்லாண்டு முயற்சிகளுக்குப் பிறகு நிறைவேறியது. பரம்பிக்குளம் திட்டம் என்றவுடன் வி.கே.பி.எனும் பெயர் நினைவுக்கு வரும் என்பது என்றும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்ந்த திரு.வி.கே.பழனிச்சாமிக்கவுண்டர் 1971 ஆம் ஆண்டு மறைந்தார். ஆனால் பரம்பிக்குளம் ஆழியார் நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.

■

**RAJU (PARTNER)**
**RPR ELECTRICAL AND CABLE COMPANY**
**PHONE NO: 9442917070**

**JAGANATHAN (PARTNER)**
**RPR ELECTRCAL AND CABLE COMPANY**
**KONGU COMMITTEE MEMBER**
**PHONE NO: 9443742696**

















## OUR SERVICES

- ROUND FLEXIBLE CABLES
- COPPER FLAT , COPPER WIRE & GI FLAT
- DISTRIBUTION BOARDS
- UNDERGROUND CABLES
- DISTRIBUTION BOARDS
- SPECIAL PANELS
- CABLE GLANDS AND SOCKETS
- ELECTRICAL GLOVES AND MOTOR STARTERS
- MCB, RCCB, MCCB
- MAINSWITCH, CHANGEOVER & CAPACITOR
- ALL KIND OF INDUSTRIAL & DOMESTIC SPARES SUPPLIERS

# RPR ELECTRICAL AND CABLE COMPANY

**NO.2, VCTV MAIN ROAD, WD-28, ERODE-638001**
**GST NO: 33ABGFR3012G1ZO PH: 7395870815, 9842712370**

# மரம் வளர்ப்போம் மழை பெறுவோம் மனித இனம் காப்போம்

திரு.க.சின்னசாமி தலைவர்,
வனம் இந்தியா பவுண்டேஷன், பல்லடம்,
திருப்பூர் மாவட்டம்.

வனம் இந்தியா பவுண்டேஷன் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு 50 அறங்காவலர்கள் வைத்து ஆரம்பிக்கப்பட்டு இன்று 1100க்கும் மேற்பட்ட அறங்காவலர்கள் இணைந்து இயற்கையைக் காக்கும் இறை பணியில் ஈடுபட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழலை பாதுகாப்பது பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துதல், பல்லடம் பகுதியில் பசுமையை அதிகரிக்கச் செய்தல், மழைநீரை வளமாக்கி நீர் ஆதாரத்தை மேம்படுத்துதல், கழிவுகளை வளமாக்கி மதிப்புக்கூட்டல், இயற்கை வேளாண்மையை ஊக்குவித்தல் என்ற ஐம்பெரும் நோக்கங்களை தாரக மந்திரமாகக் கொண்டு கடந்த ஒன்பது ஆண்டுகளாக சிறப்பாக இயங்கி வருகிறது.



இதுவரை 100க்கும் மேற்பட்ட திட்டப்பகுதிகளில் 10 லட்சம் மரங்களை வைத்து காடுகளை உருவாக்கி, அதனால் பல்லுயிர் பெருக்கத்திற்கு வழி வகுத்து, மழைப் பொழிவை அதிகப்படுத்தி, காற்றிலுள்ள கரியமில வாயு அடர்த்தியை குறைத்துள்ளோம். தமிழ்நாடு விவசாய கல்லூரி, வனக்கல்லூரி, வானவராயர் விவசாய கல்லூரி, பிஜிபி விவசாய கல்லூரி ஆகியோருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, எங்கள் திட்டப் பகுதியிலே மரம் வைத்ததால் என்ன மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை முறையாக ஆவணப்படுத்தி வருகிறோம்.

நாங்கள் மரங்களை வைப்பதோடு இல்லாமல் அவைகளை முறையாக பாதுகாத்து மூன்று வருடங்கள் தொடர்ந்து பராமரித்து வளர்த்து வருகிறோம். காடுகள் உள்ள பகுதிகள் மழைப்பொழிவு இரு மடங்காகி உள்ளது என்பதை அறிவியல் பூர்வமாக ஆவணப்படுத்துகிறோம். மரங்களை நடுவதற்காக குழிகளை எடுப்பதற்கு ஏதுவாக நல்ல ஜேசிபி இயந்திரத்தை ரூபாய் 35 லட்சம் செலவில் எங்களுக்கு சென்னை சில்க்ஸ் மற்றும் குமரன் தங்க மாளிகை நிறுவனத்தினர் இலவசமாக அளித்து உள்ளார்கள் என்பதை இந்நேரத்திலே நன்றியுடன் குறிப்பிடுவதில் மகிழ்வு கொள்கிறோம்.

400க்கும் மேற்பட்ட வீடுகளில் எங்களுடைய தொழில் நுட்பத்தின் உதவியால் மழை சேகரிப்பு தொட்டிகளை அமைத்து, வருடம் முழுவதும் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் மழை நீரே போதும் என்ற அளவுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளோம். மாதந்தோறும் வான்மழை கருத்தரங்கு நடத்துவதன் மூலம் விஞ்ஞானிகளை கொண்டு விவசாயிகளுக்கு விழிப்புணர்வு, இயற்கை விவசாயத்தில் வெற்றி பெற்றவர்கள் அனுபவத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் மற்றவர்களையும் இயற்கை விவசாயியாக ஊக்குவித்து உள்ளோம். மரம் வளர்ப்பில் சாதனை படைத்தவர்கள், இயற்கை காவலர் ஆகியோரை அழைத்து கௌரவப்படுத்துகிறோம்.

மரம் ஒரு வரம் திட்டத்தின் கீழ் ஒவ்வொருவரும் தன்னுடைய பிறந்தநாள், திருமணநாள், நிறுவனங்களின் ஆண்டு விழா, பெரியோர்களின் நீத்தார் நினைவு நாள் ஆகிய நாட்களில் அவரவர் பிறந்த நட்சத்திரத்திற்கு ஏற்ற மரங்களை நடுவதற்கு நேரடியாகவே வலைதளம் மூலமாகவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம்.

பள்ளி மாணவ மாணவியர்களுக்கு கல்லூரி மாணவ மாணவியருக்கு கிராமத்திலுள்ள இணைஞர்களுக்கு மரத்தை பாதுகாக்க வேண்டிய அவசியத்தைப் பற்றியும் காடுகள் அதிகப்படுத்த வேண்டிய அவசியத்தைப் பற்றி விழிப்புணர்வு பிரச்சாரங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றோம். இதற்காக எங்களுக்கு அதி நவீன LED திரை உடன் கூடிய பிரச்சார வாகனம் ஒன்றை 75 லட்சம் ரூபாயில் நன்கொடையாக கொடுத்துள்ள ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு.நாகராஜன் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றோம்.

இயற்கையை நேசிக்கும் இதயங்களை இணைக்கும் ஓர் இடமாக இந்த வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கே மரங்கள் தெய்வமாக போற்றப்பட்டு காடுகள் கோவிலாக பாவிக்கப்படுகிறது. அதற்கு ஏற்றார் போல் இந்த இடத்தை வனத்திற்கு ஒரு ஆலயமாக வனாலாயம் என்று பெயர் வைத்துள்ளோம். சுமார் 18 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கப்பட்ட இந்த நிலத்தை வழங்கியருளிய திரு.கனேஷ்வர் அவர்களுக்கு இந்நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். இந்த





வனாலாயம் இந்தியாவிற்கே ஓர் எடுத்துக்காட்டு என்று சொல்லலாம். இங்கே ஒரு கிலோமீட்டர் அளவுக்கு இரு பக்கமும் மூங்கில் மரங்கள் சூழ்ந்த பசுமை நடைபாதை, குழந்தைகள் விளையாடுவதற்கு விளையாட்டு வளாகம், ஆடவர்கள் பெண்கள் உடற்பயிற்சி செய்வதற்கு திறந்தவெளி உடற்பயிற்சி மையம், நவகிரக வனம், ராசிவனம், நட்சத்திர வனம், அருகிப் போன நம் மண்ணுக்குரிய மரங்கள் உட்பட அரிய வகை மரங்களை பெருமளவில் மீட்டுருவாக்கம் செய்ய நாற்றுப்பண்ணை, தூய்மைவழி வாழ்வுக்கு வழி காட்ட மழைநீர் சேகரிப்பு திட்டம், பெண்மையை போற்றுவோம் என்று ஒவ்வொரு மாதமும் பெண்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுடைய நலனில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் கருத்தரங்குகள், வெற்றி அறக்கட்டளையின் கர்பகிருகா என்ற பெயரில் கர்ப்பிணி பெண்களுக்கு உடல் நலம் எளிமையாக பிரசவம் ஆகவும் அவர்களுக்கு பயிற்சியும் ஆலோசனையும் கொடுத்துக் கொண்டு உள்ளோம். ஆக நமது உடலும் மனமும் ஒருசேர பேணிக்காக்கும் ஒட்டுமொத்த நல்வாழ்வு மையமாக வனாலயம் திகழ்கிறது. இதைப்போல பல வனாலயங்கள் ஒவ்வொரு ஊர்களிலும் உருவாக வேண்டும் என்ற சிலநோக்கு பார்வையில் இது “மாதிரி நல்வாழ்வு மையமாக” செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை பெருமையுடன் உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

வனம் இந்தியா பவுண்டேஷன் தமிழகம் முழுவதும் ஏன் இந்திய முழுவதும் இந்த மாதிரி ஒட்டுமொத்த நல்வாழ்வு மையங்களை ஏற்படுத்துவதற்கு ஆலோசனை நல்க தயாராக இருக்கிறது. தமிழக அரசு எங்கள் பணியை ஒரு முன்மாதிரியான திட்டமாக எடுத்து செயல்படுத்த அங்கீகரிக்க வேண்டும் என இந்த நேரத்திலே எங்கள் கோரிக்கையை வைக்கிறோம். மரங்கள் மட்டுமே காற்றில் இருக்கின்ற கரியமில வாயுவை சலவை செய்யும். மரங்கள்

இல்லாவிடில் மூச்சு விடுவதற்கு காற்றுக்கே எங்கே போவது. மரங்கள்தான் மழை பொழிவை அதிகப்படுத்தும். மரங்கள்தான் பல்லுயிர் பெருக வழிவகுக்கும். மரங்கள்தான் மண்ணின் வளத்தை அதிகரிக்கும். ஆக மரங்கள் இல்லையேல் மனித வாழ்க்கை இல்லை. மரம் வளர்ப்போம். மனித இனம் காப்போம் என்று கூறி என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி,

– தகவல், இயற்கை வேளாண்மை இதழ்

## 102 வது பிறந்த நாள்

அருட்செல்வர்

டாக்டர் நா.மகாலிங்கம்

மார்ச் மாதம் 21ம் ஆம் நாள்

போற்றி வணங்குவோம்



## தன்னம்பிக்கைச் சிந்தனை

தகுதியும் வாய்ப்பும்
கைகுலுக்கும் போது
வளர்ச்சி மழை பொழியும்.

- சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

## நினைவு நாள்



தமிழறிஞர்

**சிலம்பொலி செல்லப்பன்**

அவர்களின் நினைவு நாள்

06-04-2025

வணங்கிப் போற்றுவோம்

விதைத்தவன் உறங்கினாலும்
விதைகள் உறங்காது






14–03–2025 மார்ச் மாதம் வெள்ளிக்கிழமை அய்யா கோவை செழியனார் அவர்களின் நினைவு நாளை ஒட்டி வெள்ளி விழா இல்லத்தில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு இ ஆர் ஈஸ்வரன் அவர்கள் முன்னிலையில், சங்கத்தின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் கோவை செழியன் ஐயா அவர்களின் பேரனும் பேத்தியும் மற்றும்கொங்கு சொந்தங்கள், கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினார்கள்.

## வாழ்த்துகிறோம்



இந்து சமய
அறநிலையத்துறை உயர்நிலை
ஆலோசனைக் குழுவின்
அலுவல் சாரா உறுப்பினராக
தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டதற்கு
NTC குழும தலைவர் திரு. கே. சந்திரமோகனுக்கு
கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துகளை
தெரிவித்து கொள்கிறது

## தீரன் சின்னமலை



269வது ஆண்டு
பிறந்தநாள்

**ஏப்ரல் 17, 2025**

போற்றி வணங்குவோம்

## PRECISION EQUIPMENTS (CHENNAI) PRIVATE LIMITED.,

**(ISO 9001-2015 CERTIFIED COMPANY)**





**Products** : S & T Heat Exchangers , Pressure Vesels , Skid Mounted Process units
**Industry** : Heavy Engineering
**Sectors** : Oil & Gas Down stream ,Chemical , Wind & Power
**Scope** : Engineering , Procurement , Manufacturing & Spares

Shop Accrediation - **ASME 'U' & 'U2' , NBIC 'R' , IBR**
Material Handling capacity - **200 Metric Tonne**
Max Equipment Pressure - **500 Kg/Cm$^2$**
Annual Steel Handling - **6000 Metric Tonne**

Special Machine
**6300 mm Dia VTL**

**Contact**
**Website** : www.pecpl.com E-mail : mktg@pecpl.com
**Phone** : 0091-44-47100603 / 604 ,
**Address** : B70/1, SIPCOT Industrial Park, Irungattukottai, Sriperumpudur - 602 105

## PRECISION MACHINE & AUTO COMPONENTS (P) LTD.,

(ISO 9001-2015 ; ISO 14001 : 2015 & ISO 45001 : 2018 CERTIFIED COMPANY)





**Products** : **Machined Components**
**Industry** : **Heavy Engineering**
**Sectors** : **Earth Moving , Valve , Construction, Power, Locomotive, Agriculture, Plastic & Injection Moulding, Compressor & General Engineering**
**Scope** : **Procurement & Manufacturing (End to end process is our strength)**
Shop Capacity : **1000 Components per day**
Special Machines : **CNC HMC, VMC, VTC, CNC HBM, VTL & HBM**
Annual Steel Handling : **15000 Metric Tonne**





**Contact**
**Website** : www.pmacindia.com **E-mail** : marketing@pmacindia.com
**Phone** : 00919841055203
**H.O** : No.25 & 26, Mount Poonamallee Road, Nandambakkam, Ch - 600 089.
**Works** : B70/2, SIPCOT Industrial Park, Irungattukottai, Sriperumpudur, Ch - 602 105

## KAY BEE ENGINEERING ENTERPRISES .,

(ISO 9001-2015 CERTIFIED COMPANY)












**Products** : CNC Profile Cut Parts
**Industry** : Heavy Engineering
**Sectors** : Earth Moving , Wind and Heavy Engineering
**Scope** : Manufacturing
Shop Capacity : **100 Metric Tonne of Metal Cutting per day**
Special Machines : **CNC Cutting Machines -** ( Plasma & Oxy fuel Process ) **,120 Metric Tonne WeighBridge**
Material Handling capacity : **50 Metric Tonne**
Annual Steel Handling : **30000 Metric Tonne**
Metal Thickness Cutting Range : **CS - 400 mm ,SS- 50 mm , Al - 50 mm**



**Contact**
**Website** : www.pmacindia.com **E-mail** : dheena@kbengg.com
**Phone** :0091-9094333533
**Address** : B.29, SIPCOT Industrial Park, Irungattukottai, Sriperumpudur - 602 105

# 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டுதல் கையேடு




மேலும் தகவல்களுக்கு
இந்த QR-ஐ பயன்படுத்தி
அறிந்து கொள்ளலாம்

# பொறியியல் படிப்புகள்
# Engineering Courses

## 1. INDIAN INSTITUTE OF TECHNOLOGY

12–ம் வகுப்பு படித்தவர்களுக்கு இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி (Indian Institute of Technology) வாயிலாக பொறியியல் படிப்புகள் வழங்கப்படுகிறது. அதன்விவரம்... .

| | |
|---|---|
| படிப்பின் விவரம் | Bachelor of Technology (B.Tech.,) |
| பொறியியல் பாடப் பிரிவுகள் (Branches in Engineering) | Aerospace / Agriculture / Biological Science / Biotechnolgy/ Ceramic / Chemical / Civil / Computer Science/ Electrical / Electrical and Electronics Communication / Electronics / Energy / Instrumentation / Manufacturing Science / Material / Metallurgical / Mechanical / Mineral / Mining/Naval Architecture / Ocean Engineering / Petroleum Engineering / Production and Industrial / Pulp and Paper /Textile Technology. |
| அடிப்படைக் கல்வித் தகுதி | 12ஆம் வகுப்பு (கணிதம், இயற்பியல், வேதியியல்) |
| படிப்பின் கால அளவு | 4 ஆண்டுகள் |
| எழுத வேண்டிய நுழைவு தேர்வு | Joint Entrance Examination |
| இணையதள முகவரி | www.jeemain.nic.in / www.jeeadv.ac.in |
| ஐஐடி - கள் அமைந்துள்ள இடங்கள் | சென்னை / மும்பை / டில்லி / கவுகாத்தி / கான்பூர் / காரக்பூர் / ரூர்க்கி / வாரணாசி / தன்பாத் / |
| கல்வியின் பயன்பாடு | M.Tech / MBA போன்ற உயர்கல்வி படிக்கலாம். தனியார் துறையில் வளாக பணியமர்த்தல் வாயிலாக உடனடியாக வேலைவாய்ப்பை பெறலாம். அரசு மற்றும் பிரபல தனியார் துறைகளில் பொறியாளர், கண்காணிப்பாளர், தொழில் நுட்ப அலுவலர் போன்ற பணிவாய்ப்புகளை உடனடியாக பெறலாம். சுய தொழில் தொடங்கலாம். அயல்நாட்டு வேலைவாய்ப்பையும் பெறலாம். |

மேலும் விவரங்களை கீழ்கண்ட இணையதளங்களில் அறியலாம்.

IIT Madras – www.iitm.ac.in
IIT Bombay – www.iitb.ac.in
IIT Delhi – www.iitd.ac.in
IIT Guwahati – www.iitg.ac.in
IIT Kanpur – www.iitk.ac.in
IIT Kahragpur – www.iitkgp.ac.in
IIT Roorkee – www.iitr.ac.in
IIT BHU Varanasi– www.iitbhu.ac.in
ISM Dhanbad – www.ismdhanbad.ac.in

... அடுத்த மாதஇதழில் தொடரும்...

# வாழ்த்துகிறோம்




பிரிசிசன் குழுமம் 50 வது பொன்விழா 4–03–25 அன்று வாடிக்கையாளர்கள் , சப்ளையர்கள் முன்னிலையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது .அவ்வமயம் குழுமத்தின் சார்பாக சார்பாக கோவை முதலிபாளையத்தில் அமைந்துள்ள பேரூர்அடிகளார் மருத்துவமனை கட்டிட நிதியாக ரூ 15 லட்சம் நன்கொடையாக அளிக்கப்பட்டது. தவத்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், மற்றும் பொருளாளர் – தஞ்சை தமிழ் பல்கலைகழகத்தின் மேனாள் துணை வேந்தர் திரு.சி சுப்பிரமணியன் ஆகியோர் விழா நினைவு புத்தகத்தை வெளியிட்டு , நன்கொடையினை பொற்றுக்கொண்டார்கள் .







டாக்டசி சி.பழனிவேலு, தலைவர்– ஜெம் மருத்துவமனை அவர்கள் எழுதிய "எதுவும் இன்றி" புத்தக வெளியீட்டு விழா – சென்னை ஐடிசி கிராண்ட் சோழா ஹோட்டலில் 16–02–2025 அன்று சிறப்பாக நடைபெற்றது. சென்னை வாழ் கொங்கு சொந்தங்கள். மருத்துவர்கள் மற்றும் சான்றோர்கள் திரளாக கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

SUN-X CONCRETE

# SUN-X CONCRETE INDIA PVT LTD

CHENNAI




## OUR PRODUCTS

READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS

"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam, Chennai - 600 096.

Call : 9003070704 | 9940400050 Email : sales@sunxconcrete.org

www.sunxconcrete.org

# மணமகன் தேவை



| | | |
|---|---|---|
| ஜாதகர் பெயர் | : | R.சாலினி |
| பிறந்த தேதி | : | 09-08-1999 |
| பிறந்த நேரம், இடம் | : | 05:27 am, நாமக்கல் |
| நட்சத்திரம் / இராசி | : | திருவாதிரை 4 / மிதுனம் |
| தந்தை பெயர் | : | திரு. K.ரங்கசாமி (Late) |
| தாயார் பெயர் | : | திருமதி R.சாந்தி |
| குலம் | : | செங்கன்னி |
| உடன் பிறந்தோர் | : | ஒரு தம்பி |
| உயரம் | : | 155 cm |
| படிப்பு | : | B.Sc., MSW |
| தொழில் | : | அரசு வேலை கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (Govt. Social Welfare and Women Empowerment) |
| மாத வருமானம் | : | Rs.32,000/- per month |
| சொத்து மதிப்பு | : | நேரில் |
| உகந்த மணமகன் | : | Any Degree, மாநிறம், 157 to 160 cm |
| ஜாதக குறிப்பு | : | 4ல் செவ்வாய் |
| தொடர்புக்கு | : | 95852 76399, 89251 08560 |

| | | | |
|---|---|---|---|
| | குரு<br>சனி<br>மாந் | | சந் |
| | இராசி | | சூரி/1<br>ராகு<br>புத |
| கேது | | | சுக்(வ) |
| | | செவ் | |

| | | | |
|---|---|---|---|
| சந் | செவ் | | சுக்(வ)<br>கேது<br>மாந் |
| | நவாம்சம் | | குரு |
| சூரி | | | புத |
| ராகு | | 1–லக்<br>சனி | |

KRISHYA
Kurti Manufacturers



- Casual Kurtis
- Feeding Kurtis
- Leisure Wear
- Cotton Pants



*With best compliments from*

R.K FABS, No. 76, Sankari Bye-pass road,
near Ottanmethai, Agraharam(PO),
Pallipalayam, Erode - 638008.

+91 9789973128

rkfabsppm@gmail.com

**REGD. NEWS PAPER /** **Posted on : 17-03-2025**

Posted at EGMORE RMS/1 (Pattrika Channel) | CHENNAI KONGU NANBARGAL MALAR / சென்னை கொங்கு நண்பர்கள் மலர்

Registration Number of the Newspaper : TNTAM/2016/69320 | Postal Reg. No. TN/CH(C)/602/2025-2027

Date of Publication Second Week of every month




அனுப்புதல்
சென்னை கொங்கு நண்பர்கள் மலர்
கொங்கு நண்பர்கள் சங்கம்
வெள்ளி விழா இல்லம்
எண்.34, சீனிவாசப் பெருமாள் சன்னதி
முதல் தெரு, இராயப்பேட்டை,
சென்னை – 600 014.

பெறுநர்